www.tamilarangam.net

வைகறை
VAIKARAI

அன்பளிப்பு
25p

வைகறை - வருடம் 1 விடியல் 4 வைகாசி 15 - 1991

# கடந்த மாதத்தில் மட்டும் 1000 பேர் பலி!!!

ஈழநிருபர் ஜோன்ஸ்

கடந்த மாதத்தில் மட்டும் ஈழத்தின் பலபாகங்களிலும் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாத நடவடிக்கைகளினால் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். வழமை போல செய்தி இருட்டடிப்புச் செய்யும் ஸ்ரீலங்கா அரசின் சாமர்த்தியம் இந்தக் கொடூரச் செய்தியையும் மழுங்கடிப்பதில் தனது முழுபிரயத்தனத்தையும் மேற்கொண்ட போதிலும் பல சர்வதேச நிறுவனங்களின் உதவியினூடாக செய்திகள் மேற்குலகுக்கு வெளிக் கொணரப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள இரு பெரும் முகாம்கள் மீதும் வவுனியாவின் நகர எல்லையில் அமைந்திருக்கும் தாண்டிக்குளம் முகாம் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரத் தாக்குதல்களை மேற்கொண்டது தெரிந்ததே. மன்னார் மாவட்டத்தில் நடந்த தாக்குதலின் போது ஏற்பட்ட கடும் போரில் சுமார் 455 போராளிகள் கொல்லப்பட்டதாகவும் 153 இராணுவத்தினர் தளத்திலேயே உயிரிழந்தனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. 200 இராணுவத்திற்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாகினர் என்றும் அவர்களை விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்ல அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தகவல்கள் அறிவிக்கின்றன. விடுதலைப் புலிகளின் தரப்பில் கொல்லப்பட்டதாக கூறப்படும் 455 பேரும் உண்மையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களா அல்லது வழமை போலவே பொது மக்களைக் கொன்று குவித்துவிட்டு தனது தந்திர நாடகத்தை மேடையேற்றுகிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. இது தொடர்பாக அரச தரப்பில் பேசிய மன்னார் மாவட்ட இராணுவ அதிகாரி அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்று கூறியுள்ளார். இதனை உறுதிப்படுத்த விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டப் பேச்சாளரைச் சந்திப்பது கடினமாக உள்ளதென்று Guardian (London) பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தொடர்ச்சி 15ம் பக்கம்



## சிறுவர் விளையாட்டு வாரம்

சிறுவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் செல்வன் மாக் பிரசாத் தலைமை தாங்கிக் கொண்டிருப்பதை படத்தில் காணலாம். அவர் அதில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச் சங்கத்தின் அடுத்த சிறுவர் விளையாட்டு வாரம் வருகின்ற ஆகஸ்ட் மாதம் இரண்டு வாரங்களுக்கு நடாத்தப்படும் என்பதும். இதில் பங்கு கொள்ள விரும்பும் சிறுவர்கள் சங்கத்தின் முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்படுகிறார்கள். அத்துடன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிமுதல் 12.30 மணிவரை சிறுவர்களுக்கு ஆரம்ப தமிழ் வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது.

முகவரி

14, Links Road, Tooting, London SW17

எமது நிருபர்

உள்ளே...

நேரடி ஒலிபரப்பு.................... 3
சிதறல்கள் சிறுகதை.............. 4
பாலை நிலப்பூக்கள்................7
அகிம்சையிலிருந்து ............... 9
நாவலக் கலையின்..................11
உங்களுக்குத் தெரியுமா.........15

# இளம் ஆசிரியை தற்கொலை

கடந்த மாதம் கொழும்பில் நடந்த ஆசிரியர்கள் கருத்தரங்கு ஒன்றிற்கு சென்றுவிட்டு வந்த வவுனியாவைச் சேர்ந்த 21 வயது நிரம்பிய ஒரு இளம் ஆசிரியை ஈரப் பெரிய குளம் ஆமி முகாமில் வைத்து சிங்கள இராணுவத்தினராலும் தமிழ் ஏனைய இயக்க உறுப்பினர்களாலும் வழி மறிக்கப்பட்டார். இச்சமயம் இவருடன்பயணம் செய்த ஏனைய ஆசிரியர்களும் இடைநிறுத்தப்பட்டு பின்னர் போக அனுமதிக்கப்பட்டனர். இந்த ஆசிரியை மட்டும் போக அனுமதிக்கப்படவில்லை.


இதன் பின் இவர் இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக அவருடன் பிரயாணம் செய்த சக ஆசிரியர்கள் பெற்றோருக்கு தகவல் தெரிவித்தனராம். இதனைக் கேள்வியுற்ற பெற்றோர் பதட்டத்துடன் மகளை இராணுவ முகாமில் சந்திக்க ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கிய சமயம் மகள் வீடு வந்து சேர்ந்துள்ளார். வீடு வந்த சில வினாடிகளில் உடை மாற்றாமலே குளியலறைப் பக்கம்

தொடர்ச்சி 2ம் பக்கம்

www.tamilarangam.net



# வைகறையின் பேனாவிலிருந்து..........



மனித இனம் ஒன்று உருவான காலத்திலிருந்தே பெண்கள் அடிமைத்தனம் என்பதும் உருவாகி இருக்குமோ என்னும் அளவிற்கு அடிமைத்தனம் ஓங்கி வளர்ந்திருக்கும் பூமி எங்கள் ஈழபூமி. சின்ன வயதிலே சமையல் பழக்குவதும், பருவமெய்தியபின் வீட்டிலே பூட்டுவதும், கல்யாணத்தின் போது சீதனம் கொடுப்பதும் பின் காலம் முழுவதும் மனைவியாய், தாயாய் கட்டியவனின் காலடியிலே அழுந்துவதும் கட்டாயமாய்ப் போய்விட்ட பெண்களின் வாழ்க்கையில் சுதந்திரம் என்னும் சூரியன் உதயமாக வேண்டும் என்பதும் அடிமைத்தனம் அஸ்தமனமாக வேண்டும் என்பதும் பெண்களால் மட்டுமல்ல ஆண்களால்க் கூட உணரப்படும் காலம் இது.

இதுவரை காலமும் மேடைப் பேச்சுக்களிலும் அச்சுப் பிரதிகளிலும் அலைந்து திரிந்த இந்தச் சுதந்திரம், எமது ஈழப் போராட்டம் ஆயுத வடிவம் கண்டபோது நடைமுறையிலும் தனது வளர்ச்சியைக் காணத் தொடங்கியது. இந்த வளர்ச்சி வரவேற்கப்பட வேண்டிய இக்கால கட்டத்திலே தற்காலத்தில் வெளிவரும் பத்திரிகைகள் என்றாலும் சரி, ஏனைய இலக்கியங்கள் என்றாலும் சரி 'கற்பு' என்றொரு பதத்தை வருணிக்கத் தவறுவதாக இல்லை. 'கற்புக்கரசி' 'கற்பழிப்பு' 'கற்பைக் காப்பாற்று' என்று அர்த்தமில்லாத சொற்களை வெளிவாங்கி வரும் இவ்வாசகங்கள் எமது சமுதாயத்தில் ஏற்கப்படலாமா என்பது வைகறையின் வினா? ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாள் என்று கூறுவது அதனை அழுத்தம் திருத்தமாக வெளிக்கொணரும் சொல் என்பது எமது எண்ணம். அதனை விடுத்து இல்லாத ஒன்று அழிக்கப்பட்டதாக ஏன் பின்பற்றப்பட் வேண்டும்.

'கற்பு' என்பது பெண்களை அடிமைகளாக்குவதற்கு கொண்டு வந்த முதல் ஆயுதம். ஆண்கள் ஆயிரம் பெண்களுடன் படுக்கலாம். பெண் மனதால் கூட இன்னொருவனை நினைக்கக் கூடாது என்பதே கற்பு என்பதற்கு கற்பிக்கப்பட்ட விளக்கம். சிலப்பதிகாரமும், இராமாயணமும், தூக்கியெறியப்பட வேண்டிய இன்றைய காலகட்டத்திலும் கற்பு கற்பு என்று பத்திரிகைகள் எழுத அனுமதிப்பது மறைமுகமாக பெண் அடிமைத்தனத்திற்கு உரமிடுகிறோம் என்பதையே வெளிக்காட்டுகின்றது. எனவே 'கற்பு' என்பது இனிமேல் வருகின்ற பத்திரிகைகளிலோ அன்றி இலக்கியங்களிலோ வேண்டப்பட்டு எழுதப்படுமாயின் அது வன்மையாக எதிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதிலே பெண்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டியது அவசியம். வைகறை பெண்ணடிமையைத் தூக்கி எறிவதற்கான தனது பங்களிப்பை என்றும் வழங்கிக் கொண்டேயிருக்கும்.

-ஆசிரியர்-

வைகறை நிர்வாகக் குழு.



வைகறை
தமிழ் வெளியீட்டு நிறுவகம்
த.பெ.இல : 674
இலண்டன் WH1X 3XX

VAIKARAI
BM BOX : 674
LONDON WC1N 3XX.
U.K.

## இளம் ஆசிரியை......


1ம் பக்க தொடர்ச்சி

சென்ற இவர் கிருமி நாசினி அருந்தி தற்கொலை செய்துள்ளார். மேற்படி சம்பவம் வவுனியா மாவட்டத்தின் குருமன் காடு என்னும் பகுதியில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (பெயர் விபரம் சில காரணங்களைக் கொண்டு தரப்படவில்லை.)

www.tamilarangam.net



# நேரடி ஒலிபரப்பு



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை இரண்டு. நேரம் சரியாக இரண்டு மணி. அடுத்த நிகழ்ச்சி நேர்முக வர்ணணை. தொகுத்தளிப்பவர் ஏமாந்த சோணகிரி. வணக்கம் நேயர்களே! சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நேர்முக வர்ணணையை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். நாம் இப்போது வானொலி நிலையத்திலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை நோக்கிச் செல்கிறோம். இரு பக்கமும் கட்டடங்கள் காட்சிதர வானளார்ந்து நெளிந்து தேங்காய்களின் பாரம் தாங்க முடியவில்லை என்று குனிந்து நிற்பது போன்ற தென்னை மரங்கள் இடையிடையே தென்மேல் பருவப் பெயற்சிக் காற்றுக்கு அசைந்து கொடுக்க எங்களுடைய வாகனம் இதோ கட்டு நாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்து விட்டது.

அங்கு ஒரு புறத்தில் பள்ளி மாணவ மாணவிகள் மாலையும் கையுமாக தலைவரை வரவேற்கக் காத்திருக்கின்றார்கள். அரசியல் பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள், மக்கள் கூட்டம் என அரங்கமே ஜன வெள்ளத்தில் காட்சி கொடுப்பது லண்டனில் இருந்து வருகை தரும் தலைவரின் பெருமையை எடுத்துக் காட்டுவதாகவே தெரிகின்றது.

இதோ பிரித்தானிய விமானச் சேவையைச் சேர்ந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரை இறங்குகிறது. மக்கள் கூட்டம் தமிழினத் தானைத் தலைவனை ஆண்ட பரம்பரையின் அழியாத வாரிசை இரத்தம் சிந்துவதே குறிக்கோளாகக் கொண்ட வீரத்தமிழன் அஞ்சாத (அ)சிங்கம் மறக்குலத்தோன் தமிழ் உலகமே போற்றும் அண்ணர் ஸ்ரீனி இதோ விமானத்தை விட்டு தரையிறங்குகிறார். பாதுகாப்புக்கென அழைக்கப்பட்டிருந்த இராணுவம் தயார் நிலையில் நிற்கின்றது. பொலிசார் அங்கும் இங்கும் ஓடுவதும் மேல் அதிகாரிகளுடன் ஏதோ பேசுவதுமாக நிற்கின்றனர். அண்ணன் ஸ்ரீனியைத்தொடர்ந்து அவரது மெய்ப் பாதுகாவலர் இருவர் வெள்ளை அங்கி தரித்து தமிழ் உணர்வை வெளிக்காட்டிய வண்ணம் விமானத்தை விட்டு தரையிறங்குகிறார்கள்.

அண்ணண் ஸ்ரீ அவர்கள் அரசியல் பிரமுகர்களுடன் கை குலுக்கி ஏதோ உரையாடுகிறார். பள்ளி மாணவிகள் அவருக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

இதோ பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்க சம்மதிக்கிறார்.

லண்டனில் தமிழ் வெறியிலே நீங்கள் "மினிக்கப்" ஓட்டியதாகக் கேள்விப்பட்டோம். உண்மையா என ஒரு பத்திரிகையாளர் வினவுகிறார். ஆம் . ரூட்டிங் என்னும் இடத்தில் சதா தமிழ் வெறியிலும் ஈழமே இறுதி இலட்சியம் என்ற கொள்கையுடன் தான் மினிக்கப் ஓட்டுவேன் என்று இறுமாந்த குரலில் சிங்கச் சீற்றத்தில் பதிலளிக்கிறார் அண்ணர் ஸ்ரீ.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனும் அமைப்புக்காக பொறுப்பாளராக இருந்த நீங்கள் தமிழ் மக்களுக்காக பட்ட வேதனைகளை விபரிக்க முடியுமா? என ஒரு பத்திரிகையாளர் கேட்கிறார். இதோ பண்டார வன்னியனின் சிரிப்புடனும் சங்கிலியனின் சாமார்த்தியத்துடனும் இராஜராஜ சோழனின் தந்திரத்துடனும் தனது தலைவனுக்குரிய பாணியிலே பதிலளிக்கத் தயாராகிறார் அண்ணர் ஸ்ரீ. ஆம். நான் அவ்வமைப்பின் பொறுப்பாளராக இருந்த வேளை இரவு பகலின்றி, உணவின்றி, பிறண்டி விஸ்கியின்றி தனிய பியர் கான்களுடன் மட்டும் ஊர் ஊராகச் சுற்றிப் பணம் திரட்டுவேன். திரட்டுகின்ற ஒவ்வொரு பெனியும் எனது இலட்சியத்தின் அத்திவாரம் என்பதையே நான் மனத்தில் நிறுத்திக் கொள்ளுவேன். புரட்சியே முழு நோக்காகக் கொண்ட எனது தலைவன் உமாவின் கொள்கையிலிருந்து ஒரு நூலளவிலேனும் தவறாத நான் உமாவின் கொள்கைக்காகவே என் வாழ் நாளைத் தியாகம் செய்தேன். லொண்டிஸ் வாங்குவதோ, ஸ்ரெதம் எனும் இடத்தில் கடை வாங்குவதோ எனது இலட்சியத்துக்கு இடைஞ்சலாக நின்றதில்லை என்று இறுமாப்புடன் தலைவர் பதிலளிக்கிறார். இதனைத் தொடர்ந்து இன்னொரு பத்திரிகையாளர் ஆங்கிலத்தில் கேள்வி கேட்ட போது புன்னகையால் சமாளித்துவிட்டு அடுத்த கேள்விக்கு பதிலளிக்கத் தயாராகின்றார் தலைவர்.

இதோ அவரை ஏற்றிச் செல்லவென தயார் செய்யப்பட்ட பென்ஸ் கார் காவலாளிகளுடன் விமான நிலையத்தின் முன்புறமுள்ள பிரதான வாயிலில் தயாராக நிற்கின்றது. அண்ணண் அறிவு ஜீவி, தத்துவக்கடல், சிம்மக்குரலோன் செந்தமிழ்க் காவலன் ஸ்ரீனி ஒவ்வொரு அடியும் முத்தமிழே முழங்கு என ஒலிப்பது போலக் கேட்க தனது பாதங்களை முன்னோக்கி எடுத்து வைத்து நடந்து காரை நெருங்குகிறார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். தமிழ்ச்சேவை இரண்டு. இப்போது நேரம் இரண்டு மணி நாற்பத்தைந்து நிமிடம். நான் இப்போது உங்களை மீண்டும் வானொலி நிலையத்துக்கு அழைத்துச் செல்கிறேன். மீண்டும் தலைவரது நேர்முக வர்ணணையை மதிய உணவு வேளையின் பின் இதே சேவையில்க் கேட்கலாம்.

வணக்கம் நேயர்களே! நான் உங்களை மீண்டும் தலைவரின் கண் அழைத்துச் செல்கிறேன். இதோ இலங்கை ஜனநாயக சோசலிச அரசின் சிகரமென ஜொலிக்கும் எமது ஜனநாயகத் தந்தை ஜயவர்த்தனவினால் கட்டப்பட்ட ஜயவர்த்தனபுரத்தில் உள்ள பாராளுமன்றத்தை வந்து சேர்ந்து விட்டார். அண்ணணை, அழியாத் தலைவனை சேரனின் தம்பி மறக் குலத்தோனை, தமிழ் காத்து ஈழமக்களின் நல்வாழ்வுக்கு புதுநாற்றுப் போட்ட தானைத் தலைவனை முழுப் பாராளுமன்ற உறுப்பினர்களும் எழுந்து நின்று வரவேற்கிறார்கள். தலைவன் தமிழனுக்கே உரிய

– தொடர்ச்சி 16ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிதறல்கள்



## பூங்கோதை

பவளமல்லிகை மரத்திலிருந்து பூக்களின் வாசனை பரவிக் கொண்டிருந்தது. வானத்து விண் மீன்களும் மரத்திலிருந்த மல்லி கையைப்போல சிதறிக்கிடந்தன. தண்ணிரை உள்ளெடுத்து, எந்த விதமான எதிர்ப்புமின்றி இம் மரத்தினால் இவ்வளவு பூக்களை எப்படி, எதற்காகத் தரமுடிந்தது என்ற குருட்டுயோசனையில் ஆழ்ந் திருந்தாள் ஆனந்தி.

தண்ணிரைத் தொடர்ந்து ஊற் றினாலும் விட்டாலும் அது மலர் களின் சுகந்தத்தைத் தரத் தவ றியதில்லை. மலர்கள் கூட சிலநேரங்களில் பக்கத்திலிருந்த கோயிலிற்கும், சில நேரங்களில் பறிக்கப்படாமலும் இருப்பதுண்டு. தன்னுடைய பயனை மனிதர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்களா இல்லையா என்று அந்த மரம் கவலைப்படுவதில்லையே. இதே போல மனிதர்களிலும் சிலர் இருக்கிறார்கள் என்ற எண்ண த்தினூடே திடீரென்று அவளுக்கு அவளுடைய தகப்பனாரின் நினை வு எழுந்தது. ஒருவேளை அவரும் பவளமல்லிகை மரத்தைப்போல பிறருடைய சந்தோசத்தில் சந்தோச ப்பட நினைத்திருக்கக்கூடும்.

ஆனந்தியின் தகப்பனார் சதா சிவம் அவ்வூரின் உயர்நிலை ப்பள்ளியின் தலைமை ஆசிரி யராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். தான் இருந்த கால ம்வரை இயலுமானவரை ஏழைமா னவர்களின் கல்விக்கு ஊக்கம் கொடுப்பதும், ஊரின் தேவைக ளுக்கேற்ப சிறிய சேவைகளைச் செய்தும் மக்கள்மனதில் நீங்கா இடம்பெற்றிருந்தவர். ஆனால் இந்த நல்லபெயரைச் சம்பாதிக்க முடிந்த அளவிற்கு பணத்தை சேர்க்க அவரால் முடிய வில்லை. அதற்காக அவர்கள் வீட்டில் என்றைக்குமே பிரச்சனை எழுந்த தில்லை. கணவனின் குண மறிந்து, குடும்பத்தை திறம்பட நிர்வாகித்த ஆனந்தியின் தாய் கனகம் குடும்பத்தில் ஏற்பட்ட அத்தனை பிரச்சனைக்கும் இலகு வாகத் தீர்வு கண்டு வந்திருக் கிறாள். சிறிய குடும்பம் ஒரே மகள் நாட்டுப் பிரச்சனையைத் தவிர வேறு எதுவும் அவர்களை பாதிக்கவில்லை.

அளவிற்கதிகமான புத்தகங்கள், பழையகாலத்து புராண இதிகா சங்கள் அத்தனையும் கற்றறி ந்திருந்த சதாசிவம் நடைமுறை வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வு களையும் ஆனந்திக்கு சிறுவயது முதலே சொல்லிக்கொடுத்திரு ந்தார். சிறந்த நண்பகை இருந்து அவளுக்கு வழிகாட்டியதாலோ என்னவோ ஆனந்தியும் தகப் பனின் குணங்களை முற்று முழுதாகக் கொண்டிருந்தாள். அதிதமான கற்பனையில் வாழ இடம்கொடுக்காமல் மனதை இய ல்பான சாதாரண வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள பழக்கப்படுத்திக் கொண்டாள். சதாசிவத்தின் மார டைப்பினால் ஏற்பட்ட திடீர் மரணத்தைத் தொடர்ந்து வந்த இந்த நான்கு ஆண்டுகளில் அவர் களது வாழ்க்கையில் இழப்பின் துன்பம் பயமுறுத்தினாலும் கூட வேறு எந்த மாற்றமும் நிகழ வில்லை.

ஆனந்தி... ஆனந்தி, அம் மாவின் குரல் எண்ணங்களுக்குத் தற்காலிக முற்றுப்புள்ளி வைக்க வீட்டினுள் திரும்பிப் பார்க் கிறாள். நேரம் எட்டரையாய்ப் போச்சு. ஊருக்குள்ள விளக்கெரி க்கப் பயந்து சனம் எல்லாம் நித்திரை. அரைவாசி தப்பி யிருக்கிற இந்த ஊரும் எத்தனை நாளைக் கெண்டு தெரியேல்ல. நீ உள்ளுக்கு வந்து, சாப்பிட்டுவி ட்டாத்தானே நானும் விளக்கை நூக்கலாம். தாயின் கவலை அவளை சாப்பிட அழைத்தது.

அதிகம் உயிர்சேதம், பொரு ட்சேதம் இன்றி ஒன்றிரண்டு வீடுகளும், நான்கைந்து பேர்களை யும்மட்டுமே இழந்து ஓரளவு முழுமையாக எஞ்சியிருந்தது அவர் களது கிராமம். கடவுளின் கிருபையோ அன்றி இராணு வமுகாம்களில் இருந்து மிகத் தொலைவில் அமைந்து, ஆகாயத் தாக்குதலைத் தவிர வேறு எதுவும் பாதிக்கமுடியாமல் இருந்ததோ தான் காரணம். ஆனால் மிகக் குறுகிய தொலைவில் ஏராளமான அழிவுகள் நடந்திருந்தது.

ஆனந்திக்கு சிந்தனை பலமாக இருந்தது. தான் நினைப்பதை அம்மாவிடம் சொல்லி விடலாமா, வேண்டாமா என்று குழப்பமாக இருந்தது. காலையிலிருந்து இது வரை பெரிதாக எதுவும் குழப் பவில்லை. ஆனால் தாயின் முக த்தைப் பார்த்தவுடன் நேற்று நடந்த சம்பவத்தை சொல்ல வேண்டும் போன்ற துடிப்பு அவ ளிடம் எழுந்தது. எந்த சிறு சம்பவத்தையும் தாயிடமிருந்து மறைத்ததில்லை அவள். ஆனாலும் எதிலும் அவசரமில்லாத அவள் மனம் அவளை ஏனோதடுத்தது. கண்முன்னே சுரேஸின் முகம் மின்னி மறைந்தது. அதே வேளை ஆனந்தி... என்று தொடங்கி எதையோ சொல்லத் தொடங்கி னாள் கனகம்.

இண்டைக்கு பின்னேரம் மாமி வந்திட்டுப்போனவ. அண்ணர்

www.tamilarangam.net



இருந்திருந்தால் ஆனந்தியை இந்நேரம் கரை சேர்த்திருப்பார் என்று சொல்லுறா. ஊருக்குள்ளையிம் ஆமி நடமாட்டமாய்க் கிடக்கு. எல்லாம் காலம் தாழ்த்திறது நல்லதில்லை என்று பேசிப்போட்டு போறா.

ஆனந்திக்கு பாதி ஆச்சரியமும் பாதி சிரிப்புமாய் வருகிறது. இப்போது ஆமியைப் பற்றிக் கவலைப்படுகிறாவா, இல்லை மாமியைப் பற்றிக் கவலைப்படுகிறவா என்று கேட்க நினைத்து பின்பு உண்மையான கவலை ரேகைகளை தாயின் முகத்தில் கண்டு மௌனமாகிறாள். என்ன விசயம் அம்மா? மாமிக்கு சும்மா ஏதாவது என்னைப்பற்றி கிளறாட்டி விடியாது. நீங்கள் கவலைப்படாதையுங்கோ என்று சொல்லி விட்டு சாப்பிட அமருகிறாள்.

கனகம் மகளுக்காக எடுத்து வைத்த சோற்றையும், தோட்டத்தில் கிண்டிய மரவள்ளியை கறியாக்கியும் வைத்திருந்தள். அவளுக்குத் தெரியும் தன்னுடைய கைகளினால் எதைச் சமைத்தாலும் சலிக்காது சப்பிடும் மகள் ஆனந்தி என்று. அதனால்தானே கணவனை இழந்த நாள்முதலாய் இன்று வரை அன்னியர் அயலவரிடம் கடனாக எதையும் பெறாமல் தன்மானத்துடன் வாழமுடிகிறது. சாப்பாடு என்றல்ல உடையோ எதுவோ தாயின் விருப்பம்தான் மகளின் விருப்பம். உற்றார் உறவினர் வாயில் அகப்பட்டு எழும்பாமல் தாமுண்டு தம் வேலையுண்டுஎன்று இதுவரை காலமும் வாழ்ந்துவிட்டார்கள். ஒரு வேளை தர்மம் தலைகாக்கும், என்பார்களே. அதுதான் தகப்பனின் தர்மங்களும். உதவிகளும் அவர்கள் குடும்பத்தை மறைத்து நின்று காக்கிறதோ என்னவோ.

மகளின் தேவையையும் குணத்தையும். வயதையுமறிந்து நல்ல விதமாக வளர்த்து விட்டாலும், இன்று ஆனந்தியின் மாமியின்- கணவனின் தங்கை- வருகை அவளை யோசிக்க வைக்கிறது. எதையோ தான் செய்யத்தவறி விட்டதை உணர்த்திவிட்டுப் போனது போன்ற எண்ணமே அவளைக் கொல்கிறது. மற்றவர் சொல்லித்தான் தன் கடமையை ஒரு தாய் உணர வோண்டுமா என்ற நினைவினூடே ஆனந்திக்கு இப்போது இருந்திருந்து எண்ணினாலும் இருபது, இருபத்தியொண்டு தானே ஆகிறது என்று திரையொன்று விழுகிறது. இருந்தாலும் எதையும் ஆறப்போடாமல் கதையோடு கதையாக கேட்டால்தான் மனம் ஆறும்என்று விளங்க மீண்டும் பேச்சைத் தொடங்குகிறாள்.

'ஆனந்தி... ஆறுதலாய்ச் சாப்பிடு. அவசரமில்லை... இன்னும் கொஞ்சம் சோறு போடுறன். வேண்டாம் அம்மா இது நல்லாய் போதும்!. இல்லை ஆனந்தி. நீ என்ன வீட்டில பேசாமல் இருக்கிறனியே. சங்கம் சங்கம் என்று ஒரு நாளில் முக்கால் வாசி நேரம் அங்க. கால் வாசி நேரம் தானே வீட்டு ஞாபகம். உடம்பு என்னத்துக்காகும்?

அன்போடு மீண்டும் பரிமாறிய சோற்றைத் தட்ட மனமின்றி சாப்பிடுகிறாள் ஆனந்தி.

இண்டைக்கும் மாமி கேட்டிட்டுப் போறா. குமர்ப்பிள்ளைகள்

## சிறுகதை

ஊர் சுத்திறதும் வாறதும் பாக்க நல்லாயோ இருக்கு எண்டுநக்கலாய் கேட்கிறா?

ஏனம்மா என்னோட படிச்ச பிள்ளைகள் எல்லாம் இயக்கத்திற்கு போயிருக்கினம். அவையைப்பற்றி ஒண்டும் சொல்லேல்லையாமோ. ஓ பின்ன அவ எப்படிச் சொல்லுவா? சொன்னா கழுத்தில மட்டையோட போஸ்ட்டில எல்லோ நிக்க வேணும். நீங்கள் என்ன சொன்னனீங்கள்?

நான் என்னத்த பிள்ளை சொல்லிறது. கேட்டுக்கொண்டிருந்தன். கதைக்கிறவ எதைப் பற்றியும் கதைப்பினம் தானே. என்ரை பிள்ளையைப் பற்றி எனக்கு தெரியும் தானே. நீ வடிவாச் சாப்பிட்டு கையைக் கழுவிக் கொண்டு வா.

கை கழுவ எழுந்த ஆனந்திக்கு அம்மாவும் மாமியும் குறிப்பிட்ட சங்கத்தையும், அதில் தான் சேர்ந்தவிதமும் ஞாபகத்திற்கு வருகிறது. அப்பா இறந்த போது அவள் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையை எழுதி விட்டு முடிவை எதிர்பார்த்து வீட்டில் இருந்தாள். நாட்டுப்பிரச்சனை மோசமாகியிருந்த நிலமை. இவளுடன் படித்தவர்களில் பாதிப்பேருக்கு மேல் இயக்கம் என்றும். வெளிநாடு என்றும் போய் விட்டிருந்தனர். தகப்பனும் மகளும் சாதாசிவத்து மாரடைப்பு வந்தஅந்த மாலைவரை வழக்கம் போல உரையாடிக் கொண்டிருந்தனர்.

சதாசிவத்தின் கருத்துப்படி ஒன்றில் நாட்டு நிலமைக் கேற்றபடி எம்மை நாமே மாற்ற வேண்டும். அல்லது மாறிவிட வேண்டும் வெளி நாட்டிற்கு. எம்மை நாமே மாற்றுவதானால் தவிர்க்கமுடியாதபடி ஏதாவது ஒரு இயக்கத்திற்குள் எம்மை இணைத்துக் கொள்வதென்பது கட்டாயமாகிவிடும் என்று சொல்ல, ஆனந்தியோ தந்தையை எதிர்த்து வாதாடுகிறாள். அவளது கூற்றுப்படி அவளுக்கு இரண்டிலுமே சம்மதமில்லை. இயக்கத்திற்கு போவதென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாக இருக்கிறது அவளுக்கு. சரியான பாதையில் இந்த இயக்கம்தான் போய்க் கொண்டிருக்கிறது என்று சொல்ல முடியாதபடி

நாளுக்கொரு குழப்பம். அடிதடி. ஆரவாரம். கருத்து மோதல்கள். அதிலும் பாதிப்பேர் சாதாரண சமுதாய அந்தஸ்த்தைத் பெற்றுவிடவேண்டும் என்ற அவாவினால் சேருவதையும் பார்த்திருக்கிறாள். இப்படியிருக்க அப்பா சொல்வதைப்போல இயக்கத்தோடு எம்மை இணைத்துக் கொள்வதால் சமுதாயத்திற்கு என்ன நன்மை? மீண்டும் சதாசிவம் குறுக்கிட்டு கருத்து மோதல்கள் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வடிகால் அல்லவா என்று கேட்க, ஆனந்தி மீண்டும் அப்படியென்றால் அதற்கும் ஒரு மேலே போய்விட்ட நிலைமையை என்ன பெயரிடுவீர்கள் என்று கேட்கிறாள். ஏனே அவளுக்கு அப்பாவின் கருத்தை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. சதாசிவமும் புன்சிரிப்புடன் மகளின் பேச்சு வன்மையை ஆராய்கிறாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்ப ஆனந்தி உன்னை வெளிநாட்டிற்கு அனுப்பி விடுறன்போறியா, போங்கோப்பா. நான் மட்டும் எந்த இடத்திற்கு தனியாய்ப் போயிறக்கிறன் உங்களை விட்டிட்டு. எல்லாத் துக்கும் முதல் எங்கட ஊரில இருக்கிற சந்தோசம் எங்க கிடைக்கும்? நாங்கள் எல்லாரும் லீவுக்கு கொழும்பில போய் நிண்டிட்டு ஊருக்கு வர என்ன சொல்லிக்கொண்டு வந்த நாங்கள்? கண்டறியாத கொழும்பு. இந்த ஊரிண்ட சந்தோசம். அமைதி எல்லாம் எதுக்கும் ஈடாகுமே எண்டுதானே? இப்ப அமைதி இல்லாட்டியும் ஏதோ ஒரு சந்தோசம் ' என்று சொல்லி பேச்சு அன்று அத்துடன் நிறுத்த சமையல் அறையில் நின்ற கனகம் நல்ல தகப்பனும் மகளும் வந்து வாய்ச்சிருக்கினம் எனக்கு.' என்று சாப்பிட அழைத்தாள். அடுத்த நாளே எதிர்பாராவிதமாக சதாசிவம் காலமாகிவிட அந்த இழப்பின் கொடுமையிலிருந்து முதலில் மீண்டு வந்தவள் ஆனந்தி தான். அதன் பின் வந்த சில மாதங்களில் சதாசிவத்துடன் பணியாற்றிய ஒய்வு பெற்ற ஆசிரியர் மணியம் வீடுதேடி வந்து உதவியின்றித் தவிக்கும்,

வன்முறையால்ப் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு, உதவி செய்வதற்காக பொதுப்பணிச்சங்கம் ஆரம்பிக்க இருப்பதையும் ஆனந்தியின் உதவியைபெற விரும்புவதாகவும் சொல்ல உடனே சம்மதம் தொரிவித்தாள். எந்தவிதமான இயக்கச் சார்பற்ற அமைப்பு என்பதும் வீட்டிலிருந்தால் தந்தையின் நினைவு துன்புறுத்தும் என்பதும் சதாசிவம் இருந்திருந்தால் மகளை தடுத்திருக்க மாட்டார் என்பதும் கனகத்தை சம்மதம் தெரிவிக்க வைத்தன.

வீடு வீடாச் சென்று , பணம் உடுப்புகள் வீட்டுக்குத் தேவையான பாவனைப் பொருட்களைச் சேர்த்து வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயலுமான வரை கொடுத்து உதவி வருகிறார்கள் சங்கத்தினர். ஆனந்தியைத் தவிர இன்னும் சிலர் சங்கத்து உறுப்பினராக இருந்தனர். சுரேஸ் உட்பட.

'ஆனந்தி நான் சொல்வதை வடிவாய் யோசிச்சிட்டு நல்ல பதிலாய் சொல்ல வேணும். ரவியைக் கல்யாணம் கட்ட உனக்கு சம்மதமோ என்று மாமி கேட்கிறா.

சங்கடத்துடன் தாயைப் பார்த்து ஆனந்தி எதுவும் சொல்லாமல் இருக்கிறாள். பழைய படி கனகம் "அவசரமில்லை ஆறுதலா முடிவைச்சொல்லு.'

நாளைக்கு சொல்லுறனம்மா' என்ற மகளின் பதில் தாயை திகைக்கவைக்கிறது. எதையும் தட்டாமல் செய்யும் ஆனந்தி இன்று என்ன யோசிக்கிறாள். அவளுக்கு சிறுவயதுமுதலே நன்கு தெரிந்தவன். கிட்டத்தட்ட சதாசிவத்தின் குணங்கள் ஆனந்தியைப்போலவே ரவியிடமும் பதிந்திருந்தன. ரவி சதாசிவத்தின் தங்கையின் மகன். படித்து நல்ல வேலையிலிருப்பவன்.

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்களே. ஒரு வேளை ஆனந்திக்குத் தன் எதிர்கால வாழ்வை நன்றாகச் சிந்தித்துத் தீர்மானம் செய்ய வேண்டிய விருப்பம் இருக்கலாம். மகளை சிறுபிள்ளை போல எண்ணியதற்காக வெட்கப்பட்டு, அவள் நன்றாக யோசிக்கட்டும் என்று நினைத்த கனகத்திற்கு பட்டென இன்னோர் எண்ணமும் எழுகின்றது. 'ஆனந்தி.... நீ யாரையாவது விரும்பியிருந்தாலும் சொல்லு. யாரையெண்டாலும் வேளைக்கு செய்து வைக்கவேணும். சனம் நல்லது செய்ய வெளிக்கிட்டாலே நாலு கதை கதைக்கும்"

'ஏனம்மா பொதுவாய் உதவி செய்யிறதே குற்றமோ?

'இல்லை ஆனந்தி. ஆனால் இதே உதவியை நீ கல்யாணம் கட்டினாப் பிறகும் செய்யலாம் தானே? அதுக்குப் பிறகு ஒருத்தரும் ஒண்டும் சொல்ல மாட்டினம். சொன்னாலும் கவலையில்லை. "

வாறவர் இதுக்கெல்லாம் சம்மதமாமே அம்மா?' சாதாரணமாகக் கேட்டவளுக்கு தாயின் பதில் வியப்பை அளித்தது.

'ரவி, உன்னைப் பற்றி யாரோ தவறாக் கதைத்ததைக் கேட்டுப் போட்டு தானாய் வந்து என்னட்டைக் கதைச்சவன். இது மாமிக்கும் தெரியாது. ஆனந்தியைக் கல்யானம் கட்டினாப் பிறகு அவள் என்ட சம்மதத்தோட என்ன உதவியும் செய்யட்டும் எண்டு சொல்லுறான்."

தாய்க்கு எந்தப் பதிலும் தராமல் மௌனமாக உறங்கச் சென்ற ஆனந்திக்கு உறக்கம் வரவில்லை. தாய்க்கு உடனடியாக சம்மதம் தெரிவிக்க முடியாதபடி நேற்று நடந்த நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. விடிந்தால் முடிவு தெரிந்து விடும். தகப்பனைப் போல பரிவுடன் நடந்து கொள்ளும் மணியம் வாத்தியார் அவளுடன் சுரேஸைப் பற்றிக் கதைக்கத் தொடங்கினார். தன் மூலமாகத் தான் ஆனந்தி கடந்த இரண்டு வருடங்களாக சங்கத்துக்கு இவ்வளவு உதவி புரிய நேர்ந்ததையும், மனம் திருப்தியடையக் கூடிய முறையில் சங்கம் கடமையாற்றுவதையும் குறிப்பிட்டு விட்டு தொடர்ந்தும் இப்படியான பணியை அவள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அத்துடன் தகப்பனின் ஸ்தானத்திலிருந்து தானே அவளுக்குத் திருமணம் பேச இருப்பதாக சொல்லிவிட்டு, கருத்து ஒன்றாகிப் போன இருவரால்தான் குடும்பத்தையும், சமூகத்தையும் ஒரு சேரப் பார்க்க முடியும் என்று கூறி, தான் சங்கத்துள் குறிப்பிடத்தக்க ஒருவனாகி இருக்கும் சுரேஸிடம் இதுபற்றி கதைக்க இருப்பதாகவும் ஆனந்திக்கு இதுவிடயம் சுரேஸிற்கு காட்டிக் கொள்ள வேண்டாம் என்றும் வேண்டியிருந்தார். முடிவு நன்றாக இருந்தால், தானே கனகத்துடன் கதைப்பதாகக் கூறியபோது அவளால் அவரை மீறி எதுவும் சொல்ல இயலவில்லை.

அவளைப் பொறுத்த வரையில் சுரேஸ் மீது எந்த விதமான காதலோ அல்லது தனிப்பட்ட ஈர்ப்போ கிடையாது. ஆனால் மணியம் வாத்தியார் கதைத்த பின்னர் ஒருவேளை அவர் சொன்னது போல வேறு யாரையாவது மணந்தால் தனது உதவி புரியும் மனப்பாங்கையும், வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு பொருளாக வாங்கிச் சேர்க்கும் இந்தச் சங்கத்தின் குணத்தையும் புரிந்து கொள்வார்களா என்பதும் யோசிக்க வைக்க வீடு திரும்பியவள் இதைப் பின்னர் சிறிது மறந்து விட்டாலும் தாயின் பேச்சுக்கள் அதை மீண்டும் ஞாபகப்படுத்தின. எதற்கும் நாளைக் காலை சங்கத்துக்குப் போகும் போது முடிவுடன் அம்மாவிடம் மணியம் வாத்தியாரையும் அழைத்து வரலாம் என்று நினைத்தவாறே உறங்கிப் போகிறாள்.

தொடர்ச்சி 8ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாலை நிலப் பூக்கள்

நேற்று அந்தியில் நித்திரைக்குச் சென்று இன்று வைகறையில் எழுந்தபோது மனத்தில் ஏதோ மாறுபட்ட சிந்தனைகள், என்ன எவை என்று எடுத்துரைக்க முடியாத தடுமாற்றங்கள் என் மனதில் தோன்றிய வண்ணம் இருந்தன. அப்படியிருந்தும் எனதுமனம் தடுமாறவில்லை. அடுத்த வீட்டில் எல்லாம் குழந் தைகளின் மழலைக் குரல்கள் கேட்கின்றன. என் வீட்டில் அப்படியான ஓசை இல்லையே என்ற கவலைதான். ஆனாலும் அந்தக் குழந்தைகளைப் பார்த்து சந்தோசம் அடைகின்றேன். அப்போ என்மனைவி தேனீருடன் வருகின்றாள். அவளது அன்புக் கரங்களின் பரிமாற்றம் எனது கவலைகளை மறக்கச் செய்கின்றன.

இதன் மறுபுறத்தில் எனது சகோதரியின் துயர் துடைக்க யாரும் இல்லையே என்பது மனதைப் புண்ணாக்குகிறது.. நான் திருமணமாகியும் ஏங்கிக் கொண்டிருக்கின்ற கவலைகள் வேறு, அவள் எனது மூத்த சகோதரியாக இருந்தும் ஏங்கிக் கொண்டிருக்கின்ற ஆசாபாசங்கள் வேறு. அப்படியிருந்தும் மாதாந்தம் சிறு பணத்தொகையை உழைக்கும் அவள் தன்னிலும் தன் தொழிலும் தனது கவலையை மறைத்துக் கொள்கிறாள்.

இப்படியாகக் காலங்கள்கடந்து கொண்டிருக்கும் போது எனது மூத்த சகோதரன் ஒரு ஜாதகத்தையும் போட்டோவையும் கொண்டுவந்தார். அங்கே கேட்கப் படுபவை பொருத்தமாக இருந்ததினால் நிச்சயதார்த்தம் போடப்பட்டது. என் அருமைச் சகோதரிக்காக என் மனைவியின் காலில் வீழ்ந்து இருந்ததை எல்லாம் விற்று மாப்பிளை வீட்டாருக்குக் கொடுப்பவை எல்லாவற்றையும் அண்ணாவும் நானும் ஒழுங்கு செய்தோம்.திருமணத் தினத்திற்கு முதல்நாள் பணமுடிச்சுடன் அண்ணா வந்துகொண்டிருந்தபோது இனம் தெரியாத வடிவில் காலன் வந்தான். இறுதியில் திருமணப்பந்தல் சாவீட்டுப் பந்தலாக மாற்றப்பட்டது. எப்போ என்வீட்டில் குழந்தையின் அழுகைக் குரல் கேட்குமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இன்று பெரியவர்களின் அழுகைக்குரல் கேட்கின்றது. இதை எப்படிச் சொல் வேன்? யாரிடம் சென்று முறை யிடுவேன்.

இந்த நேரத்தில் மாப்பிள்ளை வீட்டுக்காரர் உடனடி யாகப் புதுப்பெண்ணைப் பார்த்து குறித்த தினத்தில் திருமணத்தை நடாத்தினர். இன்று எங்கள் வீட்டில் திருமணம் வீசவில்லை சோகமண்டலம் நிறைந்து காணப்படுகிறது. நாட்கள் பல கடந்து மாதங்களாகிப் பல மாதங்களும் கடந்தன. எனது பணநிலமையும் இறுகிக் கொண்டு வந்தது..

எனக்கும் மனைவிக்கும் இடையே இருந்த சிலசில கருத்து வேறுபாடுகள் எங்களுக்கு இடையே இருந்த அன்பைக் குறைத்துக்கொண்டு வந்தது. அப்படியிருந்தும் என்னால் அவளைப் பிரியவோ அல்லது அவளது மனதைப் புண்படுத்தும்படிஏசவோ முடியவில்லை. இப்போஎங்கள் இருவருக்கும் இடையில் சகோதரிக்காகக் கொடுத்த பணத்தால்த்தான்

பிரச்சனை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஒரு நாள் மாலை ஆபீசால் வீட்டிற்குச் சென்றேன். அங்கு நடந்த மச்சாள், மச்சாள் பிரச்சனையால் ஏழு வருடமாக நீட்டாத என் கைகள் மனைவியைச் சாடிவிட்டன. இந்தப் பிரச்சனைகளைப் பார்த்து சகிக்க முடியாத என் அருமைச் சகோதரி அன்றே வேறு வீட்டில் வாடகைக்கு அமர்ந்து விட்டாள்.

எங்கள் பிள்ளையில்லாக் குறைக்காகசோதிடரிடம் பலாபலன்களை அறிந்தோம். அவரின் கருத்துப்படி இறைவனை வணங்கிக்கொண்டு திருவையாற்றில் எண் ணெய்விளக்கு மிதக்கவிட்டோம். அன்றைய பலன் எங்களுக்குப் புனிதமாக அமைந்தது. மூன்று நான்கு மாதங்கள் கடந்தன. எங்களுக்குள் இப்போ திருமணமாகிய காலத்தில் இருந்த உறவைப்போல, புதுமணத் தம்பதி களைப்போல மிகமிக சந்தோசமாக நாட்களைக் கடத்திவந்தோம். இப்போ மற்றவர்கள் முன்புசெய்த கேலிகளை நினைக்கும்போதுஎன்மனசுமிகவும் திருப்திப்ப டுகின்றது.

இந்தக்காலகட்டங்களில் இருவரும் நெருக்கமாகப் பழகுவார்கள் என்றார்கள் வயதில் முதிர்ந்தவர்கள். அதுவும் உண்மைதான். எங்கு எப்போ சென்றாலும் உடனடியாக ஓடி வந்து எப்படிச்சுகம் என்று விசாரித்து விடவேண்டும் போல ஒரு எண்ணம் தோண றியவண்ணம் இருக்கின்றது. அவளுக்கும் அப்படி யேதான்.

என்னைத் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க விருப்பம் இருப்பதனால் எங்கு சென்றாலும் உடனடியாக வரும்படி பணித்துக்கொள்வாள். இப்படியாக காலங்கள் கடந்தன. ஒருநாள் எனது சகோதரியைக் கூட்டிவரும்படி பணித்தாள். அப்போதுதான் ஒரு விடயம் நன்றாகப் புலப்பட்டது. இவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் சுகங்களுக்காக மற்றவர்களின் சுகங்களில் பங்கு கொள்ளும் இனம் என்பது.

நான் சகோதரியை இடையிடையேசந்தித்து சுகம் விசாரித்தாலும் அவளிடம் எப்படி இங்கு வரும்படி கேட்பேன். எனது வெட்கத்தையும் மறந்து சகோதரியை அவளின் விருப்பத்திற்கு இணங்கக் கூட்டிவந்தேன். நாட்கள் கடந்துகொண்டிருந்தன. ஒருநாள் மூவரும் திருச்செந்தூர் இறைவனைத் தரிசிக்கச்சென்றோம்.நேற்று இன்று நாளை என்று நாட்கள் கடந்து பத்தாவது மாதமும்வந்தது. எனது சகோதரி எல்லாக் கடமை களையும்செய்து கொடுத்தாள். இப்போ என் மனைவியால் எதுவித வேலைகளும் செய்ய முடியாது விட்டாலும் அவள் வைத்தியரின் கட்டளைப்படி சிறு சிறு வேலைகள் மட்டும் செய்து கொண்டிருந்தாள். திடீரென ஒருநாள் சுகயீனம் காரணமாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். இரண்டு நாட்களின் பின்பு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இந்த நல்ல செய்தியைக் கேட்டு மனைவியைப் பார்க்கச் சென்றேன். அவள் பிறந்த குழந்தையையும் பார்க்காது இறந்த செய்தி கிடைத்தது. இவ்வளவு காலமும் எதிர்பார்த்தது இன்று கிடைத்தது. ஆனால் இருந்தது போய்விட்டது!

யாவும் கற்பனை. - அந்தி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6ம் பக்க தொடர்ச்சி ----

சங்கத்தின் வாசலை எட்டிய போதே மனம் படபடத்தது. அதோ மணியம் வாத்தியார் இருக்கிறார். 'வா ஆனந்தி.... உள்பக்கம் சுமதி நிற்கிறா. நேற்று வந்த காசை ஒருதரம் இரண்டு பேரும் சரி பார்த்து எழுதி வையுங்கோ' எதையோ எதிர்பார்த்து வந்தவளுக்கு அவரின் சாதாரணமான அலுவல் விடயங்கள் வியப்பளிக்க உள்பக்கம் போகிறாள். சுமதி என்ற அவளது தோழி ஆனந்தியை அழைத்துக் காசைக் கொடுத்த பின் ' ஆனந்தி உனக்கு எப்படிச் சொல்லுறதெண்டு தெரியேல்ல. மணியம் வாத்தியாருக்கு நான் சொன்னனான் எண்டு சொல்லா. மணியம் வாத்தியார், நீ வீட்டுக்கு போன பிறகு சுரேஸோட கதைக்கேக்குள்ள நானும் நிண்டனான். அவர் சொன்ன பதில் என்ன தெரியுமே? எனக்கு வீட்டில இருக்கிற பொம்பிளையாய்ப் பாருங்கோ வாத்தியார். ஆனந்தி எல்லார் வீடு வழியவும் போய் வாறதும் சிரிக்கிறதும், கதைக்கிறதும் எனக்குப் பிடிக்கேல்ல. நான் போய்க் காசு கேட்டால் அல்லது துணிமணி உதவி கேட்டால் ஒருத்தனும் தாறானில்ல. அதே நேரம் இவ போய்க் கேட்ட உடன எல்லோரும் பேசிப் பேசி என்றாலும் தரீனம். நாளைக்கு என்னைக் கல்யாணம் கட்டிப் போட்டும் உவ உப்பிடி நடந்தா என்னைப் பார்த்து அவனவன் சிரிப்பாய்ச் சிரிப்பான். கொஞ்சக் காலமே. இரண்டு வருடமாய் சங்கத்தோட தானே நிக்கிறா எண்டு சொன்னவர். வாத்தியார் பேசாமல் திரும்பிப் போட்டார். "

ஆனந்திக்கு சிறிது நேரம் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரே சங்கத்தில் கண்ணுக்கு முன்னே கலந்துரையாடி வேலைகளைப் பங்கிட்டு பொதுவாய் உதவி புரிந்ததை இவன் பிழை என்கிறானா? அல்லது சங்கத்தில் பெண்கள் இருப்பதே பிழை என்கிறானா? அல்லது பெண்கள் எல் லோரும் இயன்றவரை உதவி புரிய வேண்டும். ஆனால் தனக்கு வருபவள் அப்படியிருக்கக் கூடாது என்கிறானா? இதில் எதை அவளை நிராகரித்ததற்கு காரணமாக்குவது? தன்னுடைய திருமணம் சம்பந்தப்பட்ட விடயம் என்று அவள் கலங்கி நிற்கவில்லை. ஆனாலும் சில சமுதாயச் சிதறல்கள் இங்கும் சிதறி இருப்பதை அவளால் உணர முடிந்தது. ஒரே சங்கத்தில் கடமை புரியும், படித்த, பண்பான இவனால் இவளை மனைவியாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதற்காக எல்லோரும் அப்படி என்று சொல்வதற்கில்லை என்று நினைத்தபோது நேற்று அம்மாவின் ரவியைப்பற்றிய கதையும் மனதில் வந்து போனது. அவற்றை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அலுவலகத்தில் வேலையாயிருந்த சுரேஸிடம் பணத்தையும், அது சம்பந்தப்பட்ட விபரங்களையும் கையளிக்கச் சென்றவளை சுமதி வியப்புடன் நோக்கினாள், எப்படி இவளால் கோபப்படாமல் இருக்க முடிகிறது என்று. 'வாங்கோ ஆனந்தி!......உங்களைத்தான் பார்த்துக் கொண்டிருந்தனான். இண்டைக்கு வாத்தியார் சொன்னபடி காசு கொண்டு போய்க் கொடுக்க ஏலாது. இன்னும் இரண்டாயிரம் ரூபா தேவை. நீங்கள் ஒருக்கால் திரும்பவும் ஊருக்குள்ள போய்க் காசு சேர்க்க வேணும்' 'அதுக்கென்ன சுரேஸ் . நான் இப்பவே வெளிக்கிடுறன்' என்று புன்னகையோடு சொன்னவளின் புன்னகையின் அர்த்தம் புரியாது அவனும் சிரித்தான். ஓ... நான் காசு சேர்க்க வீடு வீடாகப் போய்வரலாம் .ஏனென்றால் நான் இன்னொருவனுக்கு மனைவியாகப் போகிறவள். உனக்கல்ல என்று நினைத்தபடியே ஆனந்தி புறப்படுகிறாள்.


# T.K.VIDEO

இலண்டன் வாழ் தமிழ் சினிமா ரசிகப் பெருமக்களுக்கு, தென்னகத்தில் வெளிவரும் படங்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள லண்டன் மாநகரில் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# T.K. VIDEO

புதிய படங்கள், பழைய படங்கள், பதிய பழைய படங்களின் ஒலி ஒளிகள் உட்பட நூற்றுக்கணக்கான படங்கள் கைவசம் உண்டு.

லண்டன் மாநகர் தவிர்ந்த ஏனைய இடங்களின் ரசிகர்களுக்கு அஞ்சல் மூலமும் அனுப்பப்படும் என்பதை பெருமையுடன் தெரிவிக்கின்றோம்.

**London - Colombo - Singapoore - Madras**

FURTHER DETAILS

# T.K. TRAVELS

Prime Building
2nd Floor
118, Tooting High Street
London SW17 0RR

Tel: 081-672 2676
Mobile: 0831 529637
Fax: 081-672 2624, 081-767 7537

www.tamilarangam.net



# அகிம்சையிலிருந்து ஆயுதம் வரை.......

எமது ஈழ விடுதலைப் போராட்டமானது பல பின்னணிக் காரணங்களைக் கொண்டு ஆரம்பமான ஒரு போராட்டம். பிரித்தானிய ஏகாதிபத்தியக் கும்பல்களினால் சுதந்திரம் என்று சொல்லி எமது தேசத்தின் வளங்கள்யாவும் சுரண்டி எடுக்கப்பட்ட நிலையில் பிரயோசனமற்ற பூமியாக கைவிடப்பட்ட வேளையில் தமது அதிகாரத்தைப் பயன் படுத்தி பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு ஆட்சியைப் பிடித்துக் கொண்டது

சிங்கள அரசு. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என மூன்று பிரதான இனங்களையும் சிங்களம், தமிழ் என இரண்டு பிரதான மொழிகளையும் கொண்ட இலங்கைத் தீவின் மீது ஏராளமான வல்லரசுகளின் கவனம் திசைதிரும்புவதற்கு கேந்திர முக்கியத்துவம் ஒரு காரணமாய் இருந்தது.

1948ஆம் ஆண்டிலிருந்து தமது கரங்களைப் பலப்படுத்தி பாராளுமன்றத்தை அமைத்துக் கொண்ட சிங்களப் பேரினவாத முதலாளித்துவ அரசியல் கட்சிகள், தமிழ் மக்களின் முன்னேற்றம் கருதியோ அன்றி பிரித்தானிய பிசாசுகளினால் உருவாக்கப்பட்ட பிரித்தாளும் தந்திரத்தின் காரணமாக ஏற்பட்ட விரிசல் காரணமாகவோ எம்மக்களின் நலங்களை கொஞ்சம் கொஞ்சமாக நசுக்குவதில் நாட்டம் செலுத்தத் தொடங்கின. கல்வியின் நிமித்தம் பெரிய பெரிய திணைக்களங்கள், அலுவலகங்களில் ஸ்திரநிலையை கைப்பற்றியிருந்த தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பறிப்பது , இனி வருங்காலங்களில் தொழில் வாய்ப்பில் பாரபட்சம் காட்டுவது, தமிழ் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் குடியேற்றங்களை உருவாக்குதல் மூலம் அப்பகுதிகளில் தமிழ் பேசும் மக்களை சிறுபான் மையினராக்குவது போன்ற இன்னோரன்ன நடவடிக் கைகள் எம்மக்களுக்கெதிராக தொடரப்பட்டமை இந்நடவடிக்கையின் பின்னணியில் நின்ற இருபெரும் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மீதும் ஐ. தே. கட்சியின் மீதும் வெறுப்பை உண்டு பண்ணியது.

தொழில் வாய்ப்பில் பாரபட்சம், உயர் கல்வித் தெரிவில் தரப்படுத்தல், மற்றைய சேவைகளில் ஒதுக்கம் போன்ற அரச நடவடிக்கைகள் அவ்வப்போது ஊசலாடும் நிலையில் இருந்த தமிழ் பேசும் மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளை அகிம்சை வளிப் போராட்டங்களிற்குத் தூண்டியது எனலாம்.

தமிழ் மொழியை சட்டமொழியாக,தேசிய மொழியாக அங்கீகரிக்காமையும் சிங்களம் மட்டும் சட்டம் அமுல்படுத்தியமையும் இனரீதியான பிரச்சனை தமிழ் பேசும் மக்களில் அடிமட்டம்வரை தேசிய இன உணர்வை ஊட்டம் பெறச் செய்த நிகழ்வுகள் என்பது யாரும் மறுக்க முடியாத ஒன்று.

ஒவ்வொரு முறையும் தேர்தல் நாடகம் நடாத்தப்படுவதும் அதிலே சிங்களப் பெரும்பாண்மை கொண்ட ஒரு அரசு ஆட்சிக்கு வருவதும் மாறிமாறி நடந்தனவே தவிர தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ஒரு தீர்வை எந்த அரசும் முன்வைக்கவில்லை. தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்ற உணர்வு உழைக்கும் வர்க்கத்திலிருந்து உருவும் வர்க்கம் வரை வேரூன்றிய வேளையில்த்தான் தமிழ்க் கட்சிகள் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சியை ஆரம்பித்து தமிழீழம் தான் இறுதித்தீர்வு என்று தேர்தல் பிரச்சாரம் செய்தது.

இனவெறியின் உச்சியிலே ஊஞ்சலாடிய பொதுமக்களும் தமிழீழம் தலைவர் அப்பாக்குட்டி அமிர்தலிங்கத்தினால் வாழைப்பழம் உரித்துத் தருவது போல தரப்படும் என்று நம்பி தமது வாக்குகளை கூட்டணிக்கு அள்ளிப்போட்டு கூட்டணியை அமோக வெற்றியீட்டச் செய்தனர். ஆனால் வாக்குகளைப் பெற வார்த்தைகளை அள்ளி வீசிய கூட்டணிப் பிரமுகர்கள் வார்த்தைகளை நடைமுறைப்படுத்த தீட்டிய திட்டம் என்ன என்பது பற்றியோ, அல்லது அதனை நோக்கி தாம் மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் பற்றியோ எதையும் தெளிவு படுத்தவில்லை.

தென்னிலங்கையில் விடயம் புரியாத அப்பாவிச் சிங்கள மக்களை இன வெறியை ஊட்டி சிங்களக் கட்சிகளும் வடகிழக்குப் பகுதிகளில் தமிழ் வெறியை ஊட்டி கூட்டணியும் வாக்கு என்ற இலட்சியத்தை வென்று பாராளுமன்றக் கதிரைகளில் பவனி வந்தனரே தவிர பாராளுமன்றத்துக்கு போகமுன் கூறிய வழங்கிய வார்த்தைகள் என்ன என்பதே ஞாபகம் அற்றவர்களாக மாறிப்போனார்கள். கொள்கைகளை முன்வைப்பதும் பின் பாராளுமன்றப் புயலில் அடிபட்டுப் போவதுமே பொது அரசியலாகிப் போன வரலாற்றுக் காற்றை சுவாசித்த

எம்மக்கள் 1977ம் ஆண்டு அமோக வெற்றியீட்டிய கூட்டணியையும் அந்த வரிசையில் நின்ற மஞ்சள் காவிகளே என்பதை அறிய நீண்டகாலம் எடுக்கவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் ஒரு கொள்கை இருக்கவில்லை. அதனை வென்றெடுக்கும் பாதை இருக்கவில்லை. அதனை மக்களுக்கு எடுத்துக் கூறும் சக்தி இருக்கவில்லை. 'வெளவால் வரும்' என்பதும் 'பண்டாரவன்னியன் பரம்பரையில் வந்தவர்கள்' என்றதும் போன்ற போதைகளை ஊட்டி காரியத்தைச சாதித்துக் கொண்ட அவர்களின் சாயம் வெளுக்க நீண்ட காலம் எடுக்கவில்லை.

ஜே.ஆரின் அரண்மனையில் மது அருந்திவிட்டு வட்ட மேசை நாடகம் போட்ட காத்தவராயன் கூத்துத் தலைவர் அமிர்தலிங்கமும் அவர்களுடன் சேர்ந்து கூத்தாடிய ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கையாலா காதவர்கள் என்பதை புரிந்து கொண்ட வேளையில்த்தான் எமது போராட்டத்தின் இன்னொரு வடிவத்தின் அவசியம் உணரப்பட்டது. அகிம்சை என்று சொன்ன போதெல்லாம் ஆயுதங்களைப் பாவித்த சிங்களப் பேரினவாத அரசை எதிர்க்க வேண்டுமாயின் உண்ணாவிரதமும் ஊர்வலமும் உதவாத ஆயுதங்கள் என்பதைப் புரிந்து கொண்ட இளைஞர்களின் விழிப்புணர்ச்சியும் உத்வேகமும் ஆயுதப்போராட்டம் ஒன்று தேவை என்ற கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதன் விளைவாக ஆங்காங்கே பாதிப்படைந்த இளைஞர்கள் கொள்கையோ இலட்சியமோ இன்றி தன்னிச்சையாக சில செயற்பாடுகளைச் செய்தனர். பொலிசைத் தாக்குவது, அரச ஆதரவாளர்களைச் சுடுவது போன்ற செயல்கள் இவற்றில் முக்கியம் வாய்ந்தமை குறிப்பிடத் தக்கது. இதன் விளைவு இலங்கை அரசு ஆயுதப்படைகளின் விஸ்தரிப்பை வடகிழக்கு மாகாணங்களுக்கு விரிவுபடுத்தியது. இச் செயல்களிலே ஈடுபட்ட இளைஞர்களை வேட்டையாடும் பணியிலே இறங்கியது. இக்கால கட்டத்தில்த்தான் சுயேச்சையாக இயங்கிய இளைஞர்கள் ஒன்று கூட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கினார்கள்.

இயக்கங்களின் வளர்ச்சி தொடர்பாக ஆராய முன்னர் விடுதலைப் போராட்டத்தில் அமைப்புக்கள் வளர வேண்டிய முறை தொடர்பாக ஆராய வேண்டியது அவசியமாகும். கடந்த காலங்களில் விடுதலைக்காகப் போராடிய இயக்கங்களின் வரலாறுகளைக் கண்கொண்டு பார்ப்போமானால் அவ்வமைப்புக்களின் வளர்ச்சி படிப்படியான மாற்றத்தை உண்டு பண்ணியிருப்பதைக் காணலாம். ஒரு அமைப்பு அதன் அங்கத்தவர்களை படிப்படியாக இணைத்துக் கொள்ள வேண்டும். இதன் நோக்கம், இணைந்து கொள்ளும் தோழ தோழிகள் முறையாகப் பயிற்றப்பட வேண்டும், அவர்கள் போராட்டத்தின் அவசியத்தை உணரவேண்டும், அமைப்பின் வளர்ச்சியை கட்டுப்படுத்திக் கட்டுக் கோப்பான நிலையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இப்படி படிப்படியாக வளரும் ஓர் அமைப்பின் பின்னடைவுகள், பற்றாக்குறைகள், பிழையான கொள்கைகள், தேவையற்ற நடைமுறைகள் தவிர்க் கப்படவும், திருத்தப்படவும் வசதியாக இருக்கும். இதுவே அந்த அமைப்பை தரமான பலமான எதிரியை வென்று உரிய இலட்சியத்தை நிலைநாட்டக் கூடிய அமைப்பாக மாற்றமடையச் செய்யும்.

ஆனால் மேற் சொன்ன சாஸ்திரம் எமது போராட்டத்தில் தலைகீழாக மாறிப்போனமை பற்றிச் சிந்திக்க முன் போராட்டத்தின் நிமித்தம் ஒன்று சேர்ந்த இளைஞர்கள் இரண்டு வேறு குழுக்களாக பிரிந்த நிலை இங்கே நோக்கப்பட வேண்டும். இவ்வாறு பிரிந்த குழுவில் ஒன்றான தமிழீழ விடுதலைப் புலிகளின் 1983ம் ஆண்டுத் தாக்குதலும் (13 இராணுவம் இறந்தமை) அதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரமும் அதன் நிமித்தம் ஏற்பட்ட உயிர், பொருள் சேதமும் எமது போராட்டத்தில் ஒரு பாய்ச்சலைக் கொண்டு வந்தது.

ஆயுதப் போராட்ட வரலாற்றை நோக்கமுன் விடுதலை இயக்கங்களைப் பற்றிய மேலோட்டமான ஒரு விளக்கத்தை நாம் அறிந்து கொள்ளல் அவசியமாகும். கிட்டத்தட்ட 1984ம் ஆண்டுப் பகுதிகளில் சுமார் 52 விடுதலை இயக்கங்கங்கள் ஈழ விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். பத்துப் பதினைந்து பேருக்கு ஒரு தலைவர் அதற்கு செம்பகம், கழுகு அல்லது நாகம் என்று பிராணிகளின் பெயர், ஈழப் போராட்டம் என்று சொல்லி நகை பறிப்பது கொள்ளையடிப்பது இதுவே அவர்களின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள். இதனுள்ளும் மக்களால் அடையாளம் காணப்பட்டதும் திடீர் வளர்ச்சியைக் கொண்டிருந் ததுமான அமைப்புக்கள் நான்கு எனலாம். அவை முறையே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (P.L.O.T), தமிழீழ விடுதலைப் புலிகள்(L.T.T.E), தமிழீழ விடுதலை இயக்கம்(T.E.L.O), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (E.P.R.L.F), என்பனவே அவை. இவை இதுவரை காலமும் அரசியல் கட்சிகள் செய்யாத செயல்கள் சிலவற்றைச் செய்தன. அவையே சாதாரண அரசியல்க் கட்சிகளிடமிருந்து இயக்கங்களை இனம் பிரித்துக் காட்டிய செயல்கள் எனலாம். இந்நான்கு இயக்கங்களையும் இரண்டு பிரிவினுள் அடக்கலாம். ஒன்று ஆயுத யுத்தத்தின் மூலம் மட்டும் விடுதலையை அடையலாம் என்ற கொள்கையுடைய அமைப்புக்கள். (T.E.L.O, L.T.T.E) மற்றயது ஆயுதத்துடன் கூடிய அரசியல்தத்துவம் இணைந்த போராட்டம் என்ற கொள்கையுடைய இயக்கங்கள் (PLOT, EPRLF) இவற்றுடன் சேர்ந்த EROS என்ற அமைப்பையும் நாம் கணிப்பில் சேர்த்துக்கொள்ளலாம்.

ஆயுதத்துடன் கூடிய அரசியல் நடைமுறைதான் வெற்றியை ஈட்டித்தரும் என்று கூறிய அமைப்புக்கள் இக் கொள்கையைத் தெரிவு செய்வதற்கு என்ன காரணம் இருந்திருக்கலாம் என்பதை இக்கட்டுரையில் ஆராய்வது சிறந்ததென எண்ணுகிறேன்.

விடுதலைப் போராட்டமானது வெறும் 'தமிழ்' என்கின்ற வெறியிலே உருவெடுத்த ஒன்று என்றாலும் வெறும் மண்ணின் விடுதலை மக்களின் விடுதலையாக மாறிவிட முடியாது என்பது சிந்தனை வயப்பட்ட இளைஞர்களைத் தூண்டியதால் ஒரு தேசத்தின் விடுதலை அதனை வென்றெடுப்பதில் மட்டுமல்ல அந்த சமுதாயத்திலே மூழ்கிக் கிடக்கும் இதர பிரச்ச னைகளையும் வென்றெடுப்பதிலும் தங்கியுள்ளது என்பதை இவ்வியக்கங்கள் சிந்திக்கத் தொடங்கின. இதற்கு இவ்வியக்கங்கள் அளித்த விளக்கம் வருமாறு: முதலாளித்துவ முதலைகளினால் சூறையாடப்பட்டிருக்கும் எமது சமுதாயம் விடுதலை பெற வேண்டுமானால் இரண்டு எதிரிகளை இயக்கங்கள் நேரிட வேண் டியேற்படும். ஒன்று பொது எதிரியான இலங்கை அரசு இயந்திரம், இரண்டாவது இதர எதிரிகளான எமது சமுதாயத்தினுள் ஊறியிருக்கும் சமுதாயப் பிரச்சனைகள். பொது எதிரியை எதிர்ப்பதில் ஒற்றுமை கொண்டிருந்த இவ்வியக்கங்கள் இதர எதிரிகளுக்கு முகம் கொடுப்பதில் வித்தியாசமான போக்கினைக் கொண்டிருந்தன.

இவ்வாறு பொது எதிரியை இனங்கண்டு கொண்ட இயக்கங்கள் உள் எதிரியை எப்படி இனங்கண்டன என்பது இரண்டாவதாக எழும் கேள்வி. இதற்கு புளட் என்னும் அமைப்புக் கூறிய விளக்கம் என்ன என்பதை இங்கு ஆராய்வதன் மூலம் விளக்கம் பெறலாம் என்று எண்ணுகிறேன். ஈழ மக்களின் சமுதாய அமைப்பில் இரண்டு இனங்கள், ஒரு மொழி, மூன்று மதங்கள் முக்கிய பங்கு வகித்தன. முஸ்லிம், தமிழ் என்பன இனங்களாகவும், தமிழ் மொழியாகவும் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களாகவும் அடையாளம் காணப்பட்டது. ஈழம் என்கின்ற ஈழதேசம் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடகிழக்கு பாரம்பரிய பிரதேசம் என வரையறுக்கப்பட்டது. இங்கே இனங்காணப்பட்ட பிரச் சனைகள் வறுமாறு: சாதிப்பிரச்சனை, பெண்ணடிமை, பிரதேச வேறுபாடு, வருமானப் பங்கீடு இவையே முதன்மை வகித்த பிரச்சனைகளாகும். இவை ஒவ் வொன்றையும் தனித்தனியே ஆராய வேண்டியது அவசியமாகும்.

சாதிப் பிரச்சனை வடகிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் பேசும் மக்கள் அண்ணளவாக ஐம்பதற்கும் மேற்பட்ட சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்.

அடுத்த இதழில்த் தொடரும்

www.tamilarangam.net



# நாவல்க் கலையின் அவசியமும் தமிழில் அதன் நிலையும்



எழுத்து, இன்று மிக முக்கியமான வியாபாரப் பொருளாகிவிட்டது. அதிலும் குறிப்பாக, பெரிதும் விரும்பப்படுவதும் விற்பனையாவதும் நாவல்தான் என்பதால் நாவல் என்ற பெயரில் ஏதேதோ குப்பைகள் வாசக மனத்துள் கொட்டப்படுகின்றன. இவை வாசக மனத்தைச் செல்லரித்துக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக காலத்துடனும் வாழ்வுடனும் மனிதன் கொள்ளும் உறவு மலினமடைந்துவிட்டது.

வாழ்வின் எந்த ஒரு துறையிலும் ஆக்கபூர்வமான சக்திகள் மனித குலத்துக்கான ஆக்கங்களையும், சுயலாப நோக்கம் மட்டுமே கொண்ட நாசகர சக்திகள் அழிவுகளையும் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞானத்தின் இயல்பான வளர்ச்சியில், ஆக்கபூர்வமான காரியங்களுக்காகக் கண்டறியப்பட்ட அணு, மனித உயிர்களை அழிக்கும் காரியத்தை நிகழ்த்த வில்லையா? அதுபோலவே, கலையிலும் சுயலாப, வியாபார சக்திகள் மனித மனத்தைச் சீரழிக்கும் காரியங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன. உயிரின் அழிவை உணர்வதுபோல், மனத்தின் சீர்குலைவை உணர முடியாததுதான் நம் துரதிஸ்டம்.

ஆனால், தன்னை உணரவும், தன்னை வெளிப்படுத்தவும் மனிதன் பிறப்பித்த கலை, மனிதமனத்தை, வாழ்வைச் செழுமைப்படுத்தும் நோக்கம் கொண்டது.எந்தஒரு கலைச்சாதனமும் அதன் சீரிய குணங்களோடு வெளிப்படும்போது மனித குலத்துக்கு உகந்ததாகவே அமையும்.

இத்தகைய கலைச் சாதனங்களிடம் ஈடுபாடு கொள்ளும் ஒருவன் அவற்றிலிருந்து பெறுவது, புதுப்பது அனுபவங்கள். அனுபவம் என்பது வாழ்வின் தன்மையை உணர்த்துகின்ற தீவிர குணம் கொண்ட நிகழ்வு. ஒவ்வொருகலை அனுபவமும் இத்தகைய தீவிரத் தன்மை கொண்ட நிகழ்வுதான். இத்தகைய தீவிர நிகழ்வுகள்தான் தனிமனித வாழ்வில்

மாறுதல்களை நிகழ்த்திய வண்ணம் இருக்கின்றன. இதன் மூலம் வாழ்வுடனான அவன் உறவு நெருக்கம் பெறுகிறது. இத்தகையகலைக் குணத்தில் ஒரு சிகரத்தை எட்டுகிறது நாவல்க் கலை. ஏனெனில் வேறெந்தக் கலைச் சாதனத்தை விடவும் வாழ்க்கைக்கும் நாவல்கலைக்குமுள்ள உறவு நேரடியானது; பந்தமானது. வாழ்வின் உண்மை நிலையை அறிய முற்படுபவன் நாவல் கலைஞன். நாவல் சாதனமும் அதன் இயல்பால் இதற்குப் பெரிதும் வசதி நிறைந்ததாக உள்ளது. எத்தகைய அனுபவத்தையும் அதன் இயல்பான தன்மையிலேயே, சுபாவமான மொழியில் வெளியிடக் கூடிய சுதந்திரம் கொண்டது நாவல்.

இந்த நேரடித் தன்மை வாழ்வுக்கும், படைப்பாளிக்கும் நாவல் கலைக்கும் இடையிலான உறவை ஆழமாக் குகிறது. அனுபவத்தின் சாராம்சத்தைத் தருவது கவிதை. இதனால், கவிதையில் அனுப வங்கள் உள்ளுறைந்தது.

அனுபவங்களின் மூலமாகப் பெறப்பட்ட மதிப்புகள் மேலெழுகின்றன.

சிறுகதை, அதன் வடிவக் குறுக்கம் காரணமாக, பெரும்பாலும் கவிதையின் சாயல் கொள்கிறது. நாடகம் மேடையேற்றக் குணத்தை முன்னிறுத்தி வெளியீட்டைத் தீர்மானிக்கிறது. இன்று எவரையும் எளிதில் கவர்ந்து விடக்கூடிய தன்மை கொண்ட திரைப்படம் கூட காட்சி ரீதியான அனுபவங்களையே, அதாவது வாழ்வின் வெளித்தோற்றங்களையே முழுவதுமாக நம்ப வேண்டியிருக்கிறது. வாழ்வின் வெளித்தோற்றங்களோடு உறவு கொள்ளும் போது மனித மனத்தினுள் ஓடும் மனவோட்டங்களையோ, சலனங்களையோ இதனால் பிடிக்க முடியாது. இவ்வாறு, பிற கலைச்சாதனங்களெல்லாம் அவற்றின் தன்மைக்கேற்ப, அனுபவங்களின் நேரடித்தன்மையை மாறுதல்களுக்குட்படுத்தி வெளியீட்டுக்கு ஏற்கின்றன.

ஆனால் வாழ்வின் முழு ஓட்டத்தையும் இயல்பாக ஏற்கக்கூடிய தன்மை கொண்டிருப்பதால்தான், வாழ்வை அணுக முற்படும் கலைஞனுக்கு மிகவும் உகந்த சாதனமாக இருக்கிறது நாவல். யதார்த்தத்தினூடாகப் பயணம் கொள்வது என்ற நாவல்க் கலையின் இந்த அடிப்படைதான், ஒரு வாசகன் ஒரு நாவலை வாசிக்க வேண்டிய அவசியத்தை உண்டாக்குகிறது. சங்கீதம், நாட்டியம், ஓவியம், கவிதை,சிறுகதை, நாடகம் போன்ற கலைகளின்,உன்னதங்களில் ஈடுபாடு கொண்டு பெறும் அனுபவச் சேர்க்கைகளால் தன்னை மேம்படுத்த முடிகிற ஒருவன், அவற்றிலிருந்துபெறுவது மனித அனுபவங்களின் வெவ்வேறு அம்சங்கள். நாவல் தருவது, மனித அனுபவங்களின் முழுமை. தன் அனுபவங்களிலிருந்து மட்டுமே வாழ்வின் தன்மையைப் புரிந்து கொள்ளும் பல ஹீனநிலையில்த்தான்மனிதன்இருக்கிறான். இத்தகைய மனிதனுக்கு நாவல் பல்வேறு மனிதர்களின் அனுபவங்களை முன்வைக்கிறது. இவற்றை ஏற்கும்போது, வாழ்வைப் புரிந்து கொள்ளும் மேலான நிலை அவனுக்குக் கிட்டுகிறது. நாவல் கலையினால் மனிதன் அடையக்கூடிய பெரும் பேறு இது. இதனால்த்தான் நாவல் மனிதனுக்கு உகந்த மிகச் சிறந்தகலை. நாவலினால்இது கூடுவது,வாழ்வுக்கு அது உண்மையாக இருப்பதன் மூலம்தான். எனவே, இக்கணம்தான் நாவலின் அடிப்படை. இதை இழந்து நிற்கும் எழுத்துக்கள் பயனற்றவை. இப் பின்னணியில், வாழ்வோடு எவ்வித ஒட்டுறவும் கொள்ளாது கற்பிதமான கதைகளை எழுதித் தள்ளும், அதன் மூலம் வாசக மனத்தை மலினப்டுத்தும் புள்ளிகள் நாவல் கலைக்குப் புறம்பானவர்கள் என்பதும், அதன் உயிர்ப்பை ஏற்றுச

www.tamilarangam.net



செயல்படும் சக்தியற்றவர்கள் என்பதும் புரியும். வியாபாரப் பித்தலாட்டங்கள் அல்ல நாவல்கள். வாழ்வைச் செழுமையாகப் பிரதிபலிப்பனவே நாவல்கள். நாவலின் அடிப்படை, வாழ்வின் யதார்த்த சித்தரிப்பு என்றாலும், அனுபவங்களின் உண்மையான பதிவு என்பது மட்டுமே ஒரு படைப்பை அவசியமான தாக்கி விடாது. அனுபவச் சோடைகள், யதார்த்தம் என்பதாலேயே படைப்பாக வேண்டுமென்பதில்லை. அவை பயனற்றவை.

தமிழில் நாவல் என்ற பெயரில் வந்துள்ள பெரும்பான்மையான புத்தகங்கள் வாசிப்புக்குப் பெறுமானமற்றவை. பயனுள்ள எழுத்து என்றால் அது ஏதோ நல்லொழுக்கம், உபதேசம், நீதி புகட்டுகிற காரியம் என்று அறியப்படும் துரதிஷ்ட நிலையே நம்மிடம் நிலவுகிறது. தொட்டில் பழக்கமாய் ஊறிவந்த நல்லொழுக்க வாய்ப்பாடுகளுக்கு கதை சொல்பவனல்ல கலைஞன். பிரசித்தி பெற்ற நம் பழம் பெரும் எழுத்தாளர்களான கல்கி, அகிலன், நா.பார்த்தசாரதி, மு.வரதராசனார் போன்றோர் நல் லொழுக்க வாய்பாடுகளுக்குக் கதைவடிவம் தந்தவர்கள்தாம். நல்லொழுக்க வாய்பாடுகளுக்கு கதை சொல்லுபவர்கள், தம் காலத்தின் முன் வாழ்பவர்களல்ல. அதனால்தான் இறந்து போன செய்திகளுக்குக் கற்பனை வடிவம் தந்து கொண்டிருக்க இவர்களால் முடிகிறது. உண்மையில் பயனுள்ளபடைப்பு என்பது, பிரம்மாண்டமான இவ்வாழ்வின் பன்முகங்களையும், அதன் பின்னங்களையும், செறிவாய் எழுத்துக்குள் அகப்படுத்துவதன் மூலம் வாசகனின் மனத்தை, அதன் மூலமாக அவன் வாழ்வைச் செழுமைப்படுத்தும் ஆற்றல் கொண்டது.

இதை விடுத்து, வாசகனாகிய தனிமனிதன் தன் வாழ்வின் பொது ஓட்டத்திலேயே எங்கும் எப்போதும் நேரடி அனுபவமாகப் பெற்று விடுகின்ற வாழ்வின் வாடிக்கையான அம்சங்களை எழுத்தாக்கி விரயமாவது படைப்பாளியின்காரியமல்ல.ஏனென்றால்இவற்றிலிருந்து வாசகன் அறிந்து கொள்ள ஏதுமில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நாம் நம் அனுபவங்களைச் சொல்லத் தெரியாதவர்களாக இருக்கும்போது, அதே அனுபவங்களை லாவகமாக எழுத்தாக்கிவிடுகிற கைகாரன்தான்

எழுத்தாளன் என்ற அபிப்பிராயத்தை நாம் கொண்டிருக்கிறோம். ஆனால், வாசகனிடம் புதிய அனுபவங்களைஏற்படுத்தத்தென்பற்றஎந்தப் படைப்பும் அர்த்தமற்றதே.தமிழ் நாவல் உலகம் வாழ்வோடு கொண்டுள்ள உறவு ,பெரும்பாலும் குறுகியது. தனிமனிதன்-குடும்பம் - சமூகம் என்ற உறவுகளின் பின்னம்தான் பொதுவான தளம் என்றபோதிலும் இத்தளத்திலேயே அறியக் கிடைத்திருக்கக்கூடிய வெளிச்சத்தை நம் படைப்புக்கள் இழந்து நிற்கின்றன. பொதுவாக, நம் படைப்பாளிகளுக்கும் வாழ்வுக்கும் இடையிலான உறவு மேம்போக்கானது; ஆழமற்றது. வாழ்க்கையை அடர்ந்த காட்டிற்குஒப்பிட்டால், ஒரப்பாதைகளில் - பழக்கத்தில் படிந்து விட்ட பாதையில் - உலாவுதல் என்பதாகவே பெரும்பான்மையான நாவல்கள் அமைந்திருக்கின்றன. இதில் எப்போதாவது நிகழ்ந்துவிடும் சிறுவிலகல் கூடப்பரவசம் தரும்நிலைமை இங்கு. வாழ்வின் அடர்த்திக்குள் நுழைந்து பயணப்பட்டு வாழ்வையும் தன்னையும் தரிசிக்கும் குணாம்சத்தின் முன், தமிழின் பெரும்பான்மை நாவல்கள் படு நோஞ்சான்கள். பெரும்பான்மையான நாவலாசிரியர்கள் நம்மைச் சுற்றி இயங்கும் உலகத்தில் அறியவரும் மனிதர்களைப் பார்க்கிறார்கள். மனிதர்கள், அவர்களின் செயல்கள், அவற்றின் விளைவுகள், இவை பார்வைக்குள்ளாகும் வெளித்தோற்றங்கள். இந்தத் தோற்றங்களை ஒரு கதை வடிவிற்குள் அடுக்குவதன் மூலம் எழுப்பப்படும் நாவல்கள் தத்துவ அடித்தளத்தை இழந்து நிற்கின்றன. தோற்றங்களில் அர்த்தங்களைக் காணும் தத்துவ நோக்கைப் படைப்பாளி இழந்து நிற்கும்போது மேலான படைப்பு சாத்தியமில்லை. பார்வையில் அகப்படுவன தோற்றங்கள். சிந்தனைகளில் பிடிபடுவன தோற்றங்களின் அடி நிலைகள். இவற்றிலிருந்துதான் வாழ்வு குறித்த உண்மைகள் வெளிச்சத்துக்கு வருகின்றன.

ஆனால், பிரபல தமிழ் எழுத்தாளர்களான கல்கி, நா.பார்த்தசாரதி, அகிலன் ஆகியோரின் பார்வைக்குள் வாழ்வின் தோற்ற யதார்த்தம்கூட அகப்படுவதில்லை. (இவர்களை எழுத்தாளர்கள் என்று குறிப்பிடுவது வசதிக்காகத்தான். உண்மையில், நாவலின் அடிப்படைத் தன்மைகூடக் கைகூடாத இவர்கள் எழுத்தாளர்களே அல்லர்.) இட்டுக்கட்டிய மாயக்கற்பனைகளே கதை வடிவில் இவர்களால் குவிக்கப்பட்டன. கற்பனை என்பதன் அர்த்தத்தையே இழந்தவர்கள் இவர்கள். தோற்றத்தை ஜோடிக்கவே இவர்களிடம் கற்பனை பயன்பட்டது. ஆனால் படைப்பாளியின் மன உலகில் கற்பனை என்பதன் அர்த்தமே வேறு. வாழ்வின் யதார்த்தத்திலிருந்து படைப்பின் யதார்த்தத்தை உருவாக்க உதவுவது அக் கற்பனை. மேலும், தோற்றங்களுக்கு இடையிலான உறவுகளை அறியபடைப்பாளியின் மனம் மேற்கொள்ளும்பயணமது. மேலான கலைஞர்கள் இத்தகு கற்பனைகளில் முக்குளித்தவர்கள்தாம். தாஸ்தாவ்ஸ்கி மிகச் சிறந்த உதாரணம். இக்கற்பனையின் வீச்சை தி.ஜானகிராமனின் 'மோக முள்' ளிலும், ப.சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி'யிலும் உணரலாம். இத்தகய கற்பனைகளின், சிந்தனைகளின் துணையால்தான் மனித மனத்தினூடே நெடிய பயணம் கொண்டிருக்கிறார்கள் நாவல் கலைஞர்கள்.

இந்தப் பயணங்களிலிருந்து கிடைத்த தரிசனங்கள் நாவல் கலைக்கு, அதன்காரணமாக , மனிதகுலத்துக்குப் பெரும்சொத்தாக விளங்குகின்றன. தோற்றத்தின் உள்முகங்களை அறியமுயலும் தத்துவ நிலைக்குத் துணைபுரிவனதாம் இக் கற்பனைகள். மிகச்சிறந்த நாவலாசிரியரான டி.எச்.லாரன்ஸ் வெளிப்படுத்திய ஒரு ஆதங்கம்: 'பிளாட்டோவின் உரையாடல்கள் விநோதமான சிறிய நாவல்கள். தத்துவமும் புனைகதையும் பிரிந்தது, இவ்வுலகின் மிகப் பெரிய சோகமாக எனக்குப் படுகிறது. இரண்டும் ஒன்றாகத்தான் புராணக்கதைக் காலங்களிலிருந்து பயன்படுத்தப்பட்டு வந்திருகின்றன.

அரிஸ்டாடில், தாமஸ் அகின்னஸ் போன்றவர்களால், இவை, ஒருவர் மீது ஒருவர் குற்றம் கண்டுபிடித்துத் தொல்லைப் படுத்திக் கொண்டே இருக்கின்ற தம்பதிகள் போல் தனித்தனியே பிரிந்துபோயின. இதன் காரணமாக நாவல் மேலோட்டமானதாகவும் தத்துவம் அருவமானதாகவும் வறண்டு போயின. நாவலில் இவ்விரண்டும் மீண்டும் இணைந்து வரவேண்டும்.

இத்தகயதொரு இணைப்பை உருவாக்கக்கூடிய ஆற்றல் மிக்க ஆளுமை நம்மிடம் இல்லை. இதுதான் தமிழில் மிகச் சிறந்த நாவல்கள் உருவாகாததன் காரணம். நவீன வாழ்வின் பிரமாண்டத்தை தன் பார்வையில் எதிர்கொண்டு ஏற்கிற, படைக்கிற சக்திமிக்க கலைஞன் நம்மிடையே இல்லை. இத்தகயதொரு ஆளுமையைத் தன் தேவையாகக் கொள்ளாத சிறுகதையில் உலகத் தரத்துக்கு இணையான சிறுகதைகள் நம்மிடமிருந்து வெளிப்பட முடிந்திருக்கிறது. ஆனால் நாவல் கலைச்சாதனத்தை ஆளக் கூடிய மிகச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறந்த ஆளுமை நம்மிடையே உருவாகாமல் போனது நம் துரதிரஷ்டமே. மிகச் சிறந்த நாவல்கள் நம்மிடையே உருவாக்கப்படாவிட்டாலும் சிறந்த, நல்ல, குறிப்பிடத்தக்க நாவல்கள் கணி சமாகப் படைக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய படைப் பாக்கத்திக்கு அனுசரணையான மனத்தை நம் நாவ லாசிரியர்களில் சிலராவது பெற்றிருக்கின்றனர். வாழ் வனுபவங்களைப் பரிசீலித்து, வாழ்வு குறித்த மேம்பாடான மதிப்புக்களை உள்ளீடாக்கும்குணாம்சம் கொண்ட நாவல்கலையின் ஆதாரம், அதனைப் படைக்கும்மனம்தான். மனத்தின் தரத்தையே படைப்பு பிரதிபலிக்கிறது. நாவல்க்கலையும் வாழ்வும் கொள்ளும் நெருங்கிய உறவின் சிறந்த குணாம்சம் இது. உன்னத மனமில்லை என்றால் உன்னத சிருஷ்டியுமில்லை. மனம் என்பது என்ன? அனுப வங்களிலிருந்து அறிவு பெறப்பட்டுசேர்மானம் ஆவதன் மூலமேமனம்செழிக்கிறது. அதேசமயம், அனுபவங்களும் மனத்தின் தன்மைக் கேற்பவே கிரஹிக்கப் படுகின்றன; பரிசீலிக்கப்படு கின்றன. இந்தப்பின்னமான உறவில் வளர்வது மனம். மேலும்அறிவுஎன்பதேஅனுபவம்தான். கருத்தும் அனுப வங்களிலிருந்து பெறப்படுவதுதான். இவையும் மனம் ஏற்கும் தன்மையைப் பொறுத்ததே. ஏனென்றால், மனமும் சிந்தனையும் பிரிக்க முடியாதவை. ஆக. அனுபவம், எண்ணம் , கருத்து, சிந்தனை என வாழ்வினூடான சகல உறவுகளுமே மனம் கொள்ளும் உறவுகள்தாம்.

இவற்றில் செழிப்பதுதான் மனம். எனில், மனம் என்பதே ஆளுமை. வாழ்வனுபவங்களின் பாதிப்புக்களை ஏற்கும் மனம், அவற்றினூடான சிந்தனைகளின் பயணத்தில் கண்டடையும் கருத்துக்களால் வாழ்வின் பொது ஒட்டத்தைப் பாதிக்கும் ஆற்றல் கொள்ளும்போது, அந்தமனம் சக்தி வாய்ந்த ஆளுமையாகிறது. இத்தகைய ஆளுமை கலை மனமும் கொண்டிருந்தால் கலை சிறக்கிறது. இப்படிப் பார்க்கும்போதுதான், கலை என்பது அனுபவங்களின் ஆத்மார்த்தப் பரிசீலனையில் உரு வான வடிவம் என்றாகிறது. அனுபவங்கள், ஆத்மார்த் தம், பரிசீலனை, வடிவம் என்ற இந்தநான்கின் ஒருங்கிணைந்த லயம்தான் நாவல்க்கலை. இவை ஒருங்கிணையும் தன்மைக் கேற்பவே படைப்பு தரம் கொள்கிறது. தமிழ் நாவல் உலகின் மேன்மையான மனத்தின் இரு வேறு உதாரணங்கள், தி.ஜானகிராமனும் சுந்தர ராமசாமியும், தி.ஜானகிரா மனின் 'மோகமுள்' தமிழின் தலை சிறந்த நாவல். வாழ்வின் சலனங்களையும், மனித மனத்தின் சலன ங்களையும் இப்படைப்புலகம் உள்வாங்கிய அளவிற்கு வேறெந்தத் தமிழ் நாவலும் நேர்த்தியாக உள் வாங்கியதில்லை.

நாவல் கலையனுக்கே உரிய இயல்பான தன்மையோடு, வாழ்வின் சலனங்களைத் தேர்ந்த திரைப்படக் கலையனின் பார்வையோடும், மனத்தின் சலனங்களைத் தேர்ந்த உளவியலாளனின் நுட்பத்தோடும் இப் படைப்பில் வெளிப்படுத்தியிருக்கிறார் தி.ஜானகிராமன். பாபு என்ற மையப் பாத்திரத்தினூடாக, மனத்தின் கன பரிமாணங்களை இந்த அளவிற்குச் சொன்ன தமிழ் நாவல் வேறில்லை. காலத்தின் சாரத்தைக் கிரகித்துக் கொண்ட நவீன மனம் சுந்தர ராமசாமியினுடையது. 'ஜே.ஜே:சில குறிப்புகள்' இந்த மனத்தின்கலை வெளிப்பாடு. சிந்தனை உலகும், அனுபவ உலகும் இணைந்த தன்மையில் புதிய தடம் பதித்திருக்கும் நாவல். இப்படைப்பில் அனுபவங்கள் இடம்பெறுவது அனுபவங்களுக்காக அல்ல. அவற்றின் அர்த்தங்களுக்காக. இத்தன்மையில் முழுமையாக உருவான - சிறிய, ஆனால் முக்கியமான - இன்னொரு நாவல் சம்பத்தின் 'இடைவெளி' .ஆத்மார்த்தம், பரிசீலனை என்ற இரண்டையும் இழந்து அனுபவம், வடிவம் என்பவற்றை மட்டும் ஏற்றுக்கொண்ட குறிப்பிடத்தக்க நாவல்கள் தமிழில் கணிசமாக வெளிவந்திருக்கின்றன. சாதாரண மனங்களின் உண்மையான படைப்புகள் என்று இவற்றைக் கொள்ளலாம்.


இதற்கு உதாரணமாக, அசோகமித்திரன், நீல.பத்மநாபன், சா.கந்தசாமி என்று பலரைக் குறிப்பிடலாம். ஜெயகாந்தனின் மனமும் இத்தன்மையானதுதான். சற்றே மாறுபட்டது. ஜெயகாந்தனிடம் பரிசீலனைக்கு இடமுண்டு. ஆனால் பொருட்படுத்தக் கூடிய ஒன்றல்ல அது.

சிந்தனைகளின் பாதிப்பில் பெறப்பட்ட கருத்துக்களை தம் நாவல்களில் முதல் முறையாக இடம்பெறச் செய்ததன் மூலம் பரபரப்பான கவனத்துக்கு உள்ளானவர் ஜெயகாந்தன். எனினும் அவற்றின் தரம், வாழ்வுக்கு அர்த்தம் தர இயலாத சராசரித் தன்மை கொண்டதே. படைப்பில், பாத்திரங்கள் அவரவர் மனநிலைக்கேற்ப வெளிப்படுத்தும் சிந்தனைகள், சிந்தனை உலகின் மேலான நிலைக்கு உயரவேண்டும் என்பதில்லை. படைப்பனுபவங்களின் தன்மைக்கேற்பவாவது உயர வேண்டும். பாத்திரத்தின் தன்மைக்கேற்ப பொருத்தமற்று ஜெயகாந்தனால் சிதறப்படும் கருத்துக்கள் படைப்புலகின் தர நிலையில்கூடப் பலகீனமானவையே. இந்த பலகீனமும் இவர் நாவல்களில் ஆர்ப்பாட்டமான தோற்றம் கொண்டு விடுகிறது. இதன் காரணமாக, ததும்பித் ததும்பித் தன்னைத்தானே நினைத்துக்கொண்டு நிற்கும் வெட்கக் கேடான தோற்றத்தை இவர் நாவல்கள் பெற்றுவிடுகின்றன. இவர்களுள் அசோகமித்திரன் செய்நேர்த்திக்கான சரியான உதாரணம்.

ஆனால் பரிசீலனை அற்றவர். ஆழமான மனத்தின் உயிர்த்தன்மையை ஏற்காமல் ஒரு படைப்பு செய் நேர்த்தியால் மட்டும் சிறக்க முடியாது. மனத்தின் உயர்நிலையான ஆத்மார்த்தத்தை ஒருபடைப்பு பெற்றிருக்குமானால் கலைத்திறன் சார்ந்த குறைபாடுகள் அப்படைப்பை அசைத்துவிட முடியாது. 'மோகமுள்' இதற்கு சரியான உதாரணம். மூளியேயானாலும் உயிரம்சம்தான் கலை .மூளியே யற்ற அழகு உயிரற்ற சவமென்றால் அது கலையல்ல. வாழ்வின் நெருக்கடியான பிரச்சனை களுக்குள் ஆழ்ந்து அகன்று சென்று ஆத்மார்த்தப் பரிசீலனைக்கு அவற்றை உட்படுத்துவதன் மூலம், வாழ்வின், மனத்தின் ஊற்றுக் கண்ணைத் தூர்க்கக்கூடிய சக்தியற்ற மனம் இவர்களுடையது.

*

நன்றி - 'தேடல்'



www.tamilarangam.net




**Global Printers**

164A, (Rear) Mitcham Road,
Tooting,
London SW17 9NJ.
Tel: 081-767 8895

We Undertake the following work at reasonable rates:

**PRINTING - TAMIL & ENGLISH**
Letter Heads, Business Cards,
Complement Slips, Invoices,
Wedding Cards, Invitation Cards.
Leaflets, Posters, Tickets.

**TYPESETTING:**

Outputs from 300dpi to 2450dpi
on Plain paper, Bromide & Film.
Negative or Positive outputs.

**MAGAZINES & BOOKLETS**

**ARTWORK, & LOGO DESIGNING.**

Typesetters - Graphics Designers - Printers

*Global Printers*

***For prompt service at reasonable rates call us on 081-767 8895***

**OPEN SEVEN DAYS A WEEK**
**FROM 10.00a.m. to 5.00p.m.**

www.tamilarangam.net



# உங்களுக்குத் தெரியுமா!

சட்டவியல் நிருபர் - ஜோணா

'குடிபோதையில்வாகனம்செலுத்துதல்' ஆங்கிலச்சட்டத்திற்கு எதிரானது என்பது உங்களுக்குத் தெரியாமலில்லை. ஆனால் இதுபற்றி இச் சட்டம் என்ன சொல்கிறது என்பதுபற்றி உங்களுக்குத் தெளிவாக தெரிந்திருக்கும் என்பது சந்தேகம்தான். மது அருந்திக்கொண்டு வாகனம் செலுத்தக் கூடாது என்று சட்டம் ஒருபோதும் சொன்னதில்லை.

ஆனால் இது சம்பந்தமாக ஒரு இறுக்கமான கட்டுப்பாட்டினை விதிக்கிறது. இப்படி வாகனம் செலுத்தும் ஒரு சாரதியின் போதை நிலையைக் கண்டு பிடிக்க இரத்த பரிசோதனை, சுவாசப்பரிசோதனை எனஇரு பரிசோதனைகளைச்சட்டம் கையாளுகிறது. இப்பரிசோதனைகளின்போது 100 மில்லிலீற்றர் குருதியில் 80 மில்லி கிராம் அல்லது 100 மில்லிலீற்றர் சுவாசத்தில் 35 மைக்கிரோகிராம் வரை போதை கலந்திருக்கலாம் என சட்டம்ஏற்றுக் கொள்கிறது. இதற்கு மேற்பட்டால் அச்சாரதி மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்கு குற்றம் சுமத்தப்படுவார்.

ஆனால்ஒருவர் எவ்வளவு மது அருந்தினால் இந்த எல்லையை மீறுவார் என்பது யாருக்குமே தெரியாது. இது ஒருவருடைய நிறை, பால், வயது, உட்கொண்ட உணவு, உள்ளெடுக்கப்பட்ட மதுபானத்தின் தன்மை போன்றவற்றில் தங்கியிருக்கின்றது.

இப்படி ஒரு வரையறையைச் சட்டம் விதித்திருந்த போதும் இது தொடர்பாக ஏனைய பொது மக்களின் நன்மை கருதியும், அச்சாரதியின் நலன் கருதியும் இதற்கும் மேலான ஒரு அதிகாரம் பொலிசாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது மேற்கூறப்பட்ட வரையரையை தாண்டாமல் ஒரு சாரதி மது அருந்தியிருந்த போதிலும் இப்போதையால் அச்சாரதியின் 'வாகனம் செலுத்தும் முறை' பாதிக்கப்பட்டிருக்கிறது என பொலிசாரால் அவதானிக்கக் கூடியதாக இருந்தால் அவர்மீது குற்றம் சுமத்தலாம்.

எனவே சட்டத்தின் இக் கெடுபிடியிலிருந்து ஒரேஒரு புத்திசாலித்தனமான முடிவு மது அருந்தாமல் வாகனம் செலுத்துவது ஒன்றேதான். ஆதாரங்கள்: விபத்துக்களின் முக்கிய காரணி குடிபோதை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை பரிசோதனைக்குள்ளாக்கப்பட்ட சாரதிகளில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் சட்டத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டிலும் இரண்டு மடங்குக்கு மேல் மது அருந்தியிருக்கிறார்கள். வீதி விபத்துக்களில் இறந்த சாரதிகளில் மூன்றிலொரு பங்கினர் வரையரைக்கு மேல் மது அருந்தியவர்களே.

இப்படி இறந்தவர்களின் விபத்துக்கள் அவர்களின் வதிவிடத்திலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள்ளேயே இடம் பெற்றிருக்கிறது. முதியவர்களை விட இளம் வயதினரே மதுவால் பாதிப்படைகிறார்கள்.

நன்றி

சுகாதாரக் கல்வி அதிகாரசபையின்

'That's The Limit' சஞ்சிகையிலிருந்து

## கடந்த மாதத்தில் மட்டும்......

1ம் பக்க தொடர்ச்சி


இது இவ்விதம் இருக்க வவுனியா தாண்டிக்குளம் முகாம் தாக்குதலின் போது சுமார் 75 இராணுவத்திற்கு மேல் கொல்லப்பட்டதாகவும் புலிகளின் தரப்பில் சேதமிருப்பினும் எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை என்றும் இன்னொரு செய்தி தெரிவிக்கின்றது. இத்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவமும் விமானப் படையும் இணைந்து நடாத்திய பொதுமக்களின் மீதான தாக்குதலின் போது சாஸ்திரி கூளம்குளாம், கல்மடு, பேயடிச்சான் கூளாம்குளம் போன்ற கிராமங்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.



வொண்ஸ்வேத் தமிழர் நலன்புரிச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சிறுவர் விளையாட்டு வாரத்தில் (8-4-91 - 12-4-91) வருகை தந்திருந்த **Asian Youth Project Social Workers**, சங்கத் தலைவர், செயலாளர், தமிழ் ஆசிரியை, விளையாட்டுத் தலைவர், கல்விச் செயலாளர் உட்பட சிறுவர்கள் கூட்டம்.

www.tamilarangam.net






## நேரடி ஒலிபரப்பு......

*3ம் பக்க தொடர்ச்சி*

இறுமாப்புடனும் குல மானத்துடனும் கும்பிட்ட கரங்களுடனும் தமிழினத்தின் விடிவை ஒளிமயமான அந்த எதிர்காலத்தை மனத்திலே நிறுத்திக் கொண்டு கண்கள் இரண்டும் இலட்சிய வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் புரட்சிமணிகளாய்ச் சிந்த தலைவன் ஸ்ரீனி (ஸ்ரீ என்றால் கொள்ளை னி என்றால் அடிப்பவன் ) பாறாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யும் இடத்தை வந்தடைந்து விட்டார்.

இதோ தலைவன் சத்தியப் பிரமாணம் செய்வதை அப்படியே உங்களுக்கு உங்கள் காதுகளில் தேனெனத் தமிழோசை ஊறத் தருகிறோம்.

"டொலராயும், மற்றும் பிறாங், ஸ்ரேளிங் பவுணாயும் மக்களுக்கெனத் திரட்டப்பட்ட நிதியை கணக்குக் காட்டாமல் கொள்ளையடித்து பென்ஸ் காரும், பெரிய பலசரக்குக் கடைகளும் வாங்கிய ஸ்ரீனி என்று அழைக்கப்படும் ஸ்ரீனிவாசன் ஆகிய நான் இந்த ஜனநாயகப் பாராளுமன்றத்தில் யாழ்ப்பாண மக்களின் ஒரே பிரதிநிதியாக பதவியேற்கிறேன். இன்றிலிருந்து நான் சுத்துமாத்துப் பண்ணுவதை சிங்கள எம். பிக்களுடன் சேர்ந்து யாழ்நகர் வரை அதை விஸ்தரிப்பேன் என்று உறுதி கூறுகின்றேன். இந்தப் பாதையில் எந்த இடையூறுகள் வந்தாலும் அதில் அப்பாவி மக்களைப் பணயம் வைத்து மேலும் மேலும் கடைகளை வாங்கி தமிழ்ச் சேவை புரிவேன் என்பதை என் மனதைச் சாட்சியாய் வைத்து உறுதி கூறுகிறேன்."

வணக்கம் நேயர்களே! இதுவரை தலைவரின் நேர்முக வர்ணணையைக் கேட்டீர்கள்.

- ஈழவிழி-

**With Compliments**

**T. Thiyagalingham**
**18, Nightingale Lane,**
**London SW12 8TB**
**Tel: 081-675 1415**

**Contact for all your needs in Insurance, Mortgage and Travel Requirements**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்